ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை { வெளி நாடு 0—1—6
உள் நாடு 0—1—0

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

வாரப்பதிப்பு.

ஆசிரியர் ஈ. வே. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மலர் 6 | ஈரோடு, பிரமோதூதவரு தைமீ 26 உ (8—2—1931) ஞாயிற்றுக்கிழமை | மலர் 41

கவனியுங்கள்!

கவனியுங்கள்!!

ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், தங்க மெடல்களும் பரிசுபெற்றது,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

உலகப்பிரசித்திபெற்ற உண்மையான மருந்துகள்.

காமகேசரி குளிகை.

(தங்கபஸ்பம் சேர்ந்தது)

தாதுபுஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இம்மாத்திரைகள் தாதுபுஷ்டியையும் தளர்ந்த நரம்புகளைக் கெட்டிபடுத்துவதிலும் பிரசித்தி பெற்ற பலவித யூனனி சரகுகளும் அசல் தங்க பஸ்பமும் சேர்த்து சாஸ்திர முறைப்படி தயார் செய்யப் பட்டது.

வயது சென்றதாலும், மிதமிஞ்சிய சம்போகத்தாலும், பலவித துர் அப்பியாசங்களாலும் இழந்து போன ஆண் தன்மை'யானது இம்மாத்திரைகளை சாப்பிட ஆரம்பித்தவுடன், மீண்டும் அதிகரிக்கச் செய்கிறது. பலக்குறைவு, கைகால்அசதி, சோம்பல், இடுப்புவலி, சம்போக காலத்தில் ஏற்படும் நரம்புத்தளர்ச்சி, துரிதஸ்கலிதம். சொற்பனஸ் கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கும். சரீர புஷ்டியும், திரேககாந்தியும், வீரிய விருத்தியும், மிகுந்த ஆண் தன்மையும் உண்டாகும். தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி இல்லர இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச் செய்யும். யாதொரு பத்தியமில்லை.

80 மாத்திரைகள் விலை ரூ. 10—0—0
40 மாத்திரைகள் விலை ரூ. 5—0—0

மஹா சந்தனாதித் தைலம்.

(ஓர் போகீஸ்வரரின் அனுபவ முறை)

இத் தைலத்தில் அரேகவித பச்சிலை மூலிகைகள் சேர்ந்திருப்பதால் சரீரத்திலுள்ள உஷ்ணத்தையும் நீக்கிக் குளிர்ச்சியைக் கொடுப்பதுடன் கண்களில் உண்டாகும் பலவித வியாதிகளையும் ஆச்சரியமாய் குணம் செய்கிறது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கண் எரிச்சல், கண்ணில் நீர்வடிதல், கண் கூச்சம், கண்குத்தல் சதைவளர்தல், மேகநீர் வெள்ளெழுத்து, மண்டையிடி, ஒருத்தலை நோய், பீனிசம், காதுநோய், காதுமந்தம், சரீரத்தில் அதிக உஷ்ணத்தினால் உண்டாகும் திரேக காந்தல், சிருகிருப்பு, மயக்கம், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல், மூளைகொதிப்பு, நித்திரை யின்மை, தலைமயிர் உதிர்தல் முதலிய சகலவித நோய்களையும் குணம் செய்வதுடன் சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி கண்களுக்கும், மூளைக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

இத்தைலதத்தை ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம். இத்தைலத்தை உபயோகித்தவர்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்து குவிகிறது. ஒரு முறை இத்தையிலத்தை உபயோகித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0
12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

வி. பி. தாபால் சிலவு பிரத்தியேகம். முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்குக் கேட்லாக் இலவசமாய் அனுப்பப்படும். மலாய் நாட்டுவாசிகள் ஆர்டருடன் 5 ரூபாய் அனுப்பவும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலிக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி.	...	0—8—0
மனு நீதி மருமம்	...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு.	...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு.	...	0—2—0
சோதிடப் புரட்டு.	...	0—3—0
திரு ஈ. வெ ராமசாமியின் சிந்திருத்தமகாநாட்டுச் சொற்பொழிவு (2-பதிப்பு)	...	0—2—0
சுயமரியாதைப் பாடல்	...	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.	...	0—3—0
பஞ்சாங்கம் அல்லது பார்ப்பனக்கொடுமை	...	0—4—
ஞானசூரியன்	...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி [illegible]		0—4—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)		0—3—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?	...	0—2—0
* இயற்கையதம்	...	0—8—0
* சுயமரியாதைத் தத்துவ கீதங்கள்	...	0—4—0
* திருக்குறள் 1330 குறளுக்கு உரையுடன்	...	0—8—0
* சுவாமிகளின் அடிமை	...	0—12—0
* சிதம்பர ரகசியம்	...	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.		0—4—0
* கயமரியாதைக்கப்பல்.	...	1—0—0

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக மட்டுமே அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி, கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்
ஈரோடு

புதுமைவழிசீர்

ஆசிரியர்:
S. குருசாமி
B. A. அவர்கள்

20 பக்கங்களோடு அழகிய முறையில் திங்கட்கிழமை தோறும் வெளிவரும் சுயமரியாதைச் செந்தமிழ் வாரப்பத்திரிகை. வருடசந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 5.
மாதிரிப்பிரதி இனம்!

மானேஜர்,
4 லஸ் ஸிதொலாந்தால் வீதி
புதுச்சேரி (F. இந்தியா)

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இப்புத்தகமானது "சுயமரியாதைக்காரர்கள் கடவுளை நிந்திக்கின்றார்கள்" என்று சொல்லும் புராணமரியாதைக்காரர்களுக்கு சமாதானம் சொல்வதற்கென்றும், கடவுளை நிந்திக்கின்றவர்கள் சுயமரியாதைக்காரர்களா? புராணமரியாதைக்காரர்களா? என்பதைப்பொது ஜனங்களுக்கு உணர்த்துவதற்கென்றும், சாத்தான்குளம் பண்டிதர் திரு அ. இராகவன் அவர்களால் எழுதப்பட்டதாகும். இதில் "இந்து"க்கள் கொண்டாடும் கடவுள் என்பதைப்பற்றியும், முருகன், விநாயகர், பிரம்மா, இந்திரன், விஷ்ணு, சிவன் ஆகியவர்களைப் பற்றியும், புராணங்கள் முதலிய இந்து ஆதாரங்களில் உள்ளவைகளை எடுத்து ஆதாரமாகக் காட்டப்பட்டதுவுமாகும். 50 பக்கம் உள்ள புத்தகம் விலை அணா 0—2—0. 3 அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

அறிவிப்பு.

தஞ்சாவூர் ஜில்லா, மன்னார்குடி தாலூகா, வெள்ளாங்கூளி கிராமம் முத்துச்சாமியின் மக்களும், தற்சமயம் மலாக்காவில் வசித்து வருபவர்களுமாகிய கீழ் கையொப்பமிட்ட இராமசாமி 1. லக்ஷ்மணன் 2. கதிர்வேலு 3. ஆகிய நாங்கள் மூவரும் இதனால் யாவருக்கும் தெரிவித்துக் கொள்வதென்ன வென்றால்:—

நாங்கள். மலேயாவிலுள்ள தெங்கா, ஜோகூர் ஸ்டேட் முதலிய இடங்களில் பார்பர் ஷாப் வைத்து தொழில் நடத்தி வருகின்றோம், வந்து கொண்டு மிருக்கின்றோம். நாங்கள் சம்பாதிக்கும் பணத்தை இந்தியாவிலுள்ள எங்களுடைய பெரிய தகப்பனார் துளசி என்பவருக்கு அனுப்பி வந்தோம். அப்பணத்தினால், அவர், மன்னார்குடி தாலூகாவில், பூவானூர் வெள்ளாங்கூளி, பெரம்பூர் முதலிய இடங்களில் பூமிகள் வாங்கியிருக்கின்றார். அந்த சொத்துக்கள் எங்களுக்கும் பாத்தியப்பட்டது. இப்பொழுது அந்த சொத்துக்களை தம்முடைய சொந்த உபயோகத்துக்காகவேண்டி, மேலே கூறிய துளசி என்பவர் எங்களுடைய அநுமதியும், சம்மதமுமில்லாமல் அச்சொத்துக்களை அடமானம் வைக்கவும், விற்பதற்கும் முயற்சி செய்துகொண்டு வருவதாக தெரிகின்றது.

ஆகையால், ஷெசொத்தின் மீது ஒருவரும் கடன் கொடுக்கக்கூடாதென்றும், அவைகளை கிரயத்துக்கும் வாங்கக்கூடாதென்றும், மேலும் துளசி என்பவரிடம் அந்த சொத்துக்களை ஆதாரமாய்க்கொண்டு யாதொருவித கொடுக்கல் வாங்கல்களும் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும், அந்த துளசி என்பவர் அச்சொத்துக்களின்மீது எவ்வித கொடுக்கல் வாங்கல்கள் முதலிய கடவடிக்கைகள் செய்திருந்தாலும் அது எங்களையாவது அச்சொத்துக்களையாவது ஒரு விதத்திலும் கட்டுப்படுத்தாதெனவும் சகல ஜனங்களுக்கும் தெரிவிப்பதோடு எச்சரிக்கை செய்கின்றோம்.

(ஒப்பம்) 1. மு. இராமசாமி
மலாக்கா 2. மு. லக்ஷ்மணன்
6-1-31. 3. மு. கதிர்வேலு

சிதம்பர ரகசியம்.

இதுவரையில்
வெளியாகாத ரகசியம்!

இது சிதம்பர புராணத்தின் ஆபாசத்தையும், கொடுமையையும், அங்கு நடக்கும் அக்கிரமங்களையும், புரட்டுகளையும் விளக்குவதாகும். படங்களுடன் நல்ல பதிப்பு. விலை அணா 8. 10 அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக் போஸ்டில் அனுப்பப்படும்.

உப்பள முற்றுகை.

இது உப்புப்போரைக் குறித்துக் கொண்டு அதன் பேரால் நடக்கும் சில அக்கிரமங்களையும "தேசபக்தர்கள்" செய்யும் புரட்டுகளையும் விளக்க எழுதியதாகும். நல்ல பதிப்பு. விலை அணா 4. 5 அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

விலாசம்:

குடி அரசு பதிப்பகம்,
ஈரோடு.

சுத்தமான கதர்.

சுத்தமான கதர் எல்லாதினுசுகளிலும் கிடைக்கும்.

விலாசம்:—

எம், சென்னியப்ப
முதலியார்,
கதர் சாலை குன்னத்தூர், P. O.
ஊத்துக்குளி S. I. R.

சுயமரியாதை இயக்கமும் காங்கிரசின் மயக்கமும்.

(திரு அ. இராகவன்)

மிக்கள் அறிவு விடுதலை பெற்ற லன்றி தேசிய விடுதலை பெற முடி யாதென்ற உண்மையை, தேசிய வாழ்விலும், மற்றையப் பொது வாழ்விலும் தம்அனுபவத்தால் கண்ட இருபதாம் நூற்றாண்டு பௌத்த ரெனப்பலரும் 'போற்றம் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் இற் றைக்கு ஐந்து ஆண்டுகட்கு முன்னர் தன் மதிப்பியக்கத்தை ஆரம்பித்தார். இச்சுருங்கிய காலத்தே அவ்வியக்கம் தமிழ் நாட்டிலே எத்தகைய உணர்ச் சியையும் கிளர்ச்சியையும் உண்டுபண் ணியிருக்கிறது என்று ஈண்டு எடுத் துக் காட்டல் அவசியமாகும். பண் டிதர் பணக்காரர், பார்ப்பனர், பிறர் உழைப்பால் வாழ்பவர், வைதிகப் பித்தர்கள் முதலிய சுயநலமும் மூட பக்தியும் சூழ்ச்சியும் குடிகொண்ட மனப்பான்மையையுடைய மக்களுள் எவராயிருந்தாலும் "சுயமரியாதை" என்றவார்த்தையைக் கேட்டமாத்திர த்திலே இடியோசை கேட்டநாகமென நடுநடுங்குவது செய்ததுகண்டே இவ் வியக்கம் இச்சுருங்கிய காலத்தில் எத் தகையதொண்டு செய்திருக்கின்றது என்பது விளங்கும். தாழ்த்தப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட மக்கள் தங்க ளுக்கு உயர்ந்த சாதியார்களால்இடப் பட்ட சாத்திர,விலங்குகளையெல்லாம் ஒடித்தெறிந்து தங்களின் மனித உரி மையைப் பெற ஆங்காங்கு முழக்கும் போரொலியே தவ்வியக்கம் செய்த தொண்டை நன்கு எடுத்து காட்டும். இற்றை ஞான்று பாலர்களும், பெண் களும் கூட வேதம், புராணம் சமயம் பழக்கவழக்க முதலிய எல்லாக்கட்டுப் பாடுகளையும் ஒழித்து பகுத்தறிவை யே தமக்குற்றதுணைவனாய் கொள்வ தும், யுவர்கள் பலர் கலப்புமணம், காதல் மண ; விதவை மணம், முத லியவைகளை ஆதரித்து புரோகிதக் கொள்கைகளை வெறுத்து வருவதும் அவ்வியக்கத்தால் தோன்றிய சிறிய பலன்கள் ஆகும்.

இப் புனித வியக்கத்தை அடி யுடன் அழித்து விடத் தோன்றிய வெளியீடுகள் பல, அதிஞர்களென் போர் பலர் மடாதிபதிகள் பலர் ஐசு வரியவான்கள் பலர், அதிகாரிகள் பலர், என்றாலும் நாளடைவில் இவ் வியக்கம் தமிழ் மக்களின்உள்ளத்தை ஈர்த்துக்கொண்டு வருகின்றதென்ப திலேயமொன்றுமில்லை. இவ்வியக் கத்தை அழித்து விட ஆள் வலி, தோள் வலி அருள்வலி, பொருள் வலி ஆண்டவன் வலி, பத்திரிகை வலி முதலிய பல சாதனங்களைக் கொண்டு வெளித்தோன்றிய மக்க ளெல்லாம் இப்பொழுது எங்கு சென் றனர் என்பதைத் தமிழ் மக்கள் நன் கறிவர். அவ்வியக்கம், "சைவக்கோ ட்டை" இங்கு சுயமரியாதைக்காரருக்கு இடமில்லை என்று கூறப் பெற்ற திருநெல்வேலிசங்கில்லாவும் கூட இற்றைஞான்று சுயமரியாதைக் காரர்களால் பிடிக்கப்பட்டதும் அச் சில்லாவிலே சைவர்கள் பார்ப்பனர் கள் முதலியோர்களின் கொடிய ஆதிக்கத்தைக்கண்டஞ்சாது யுவர்கள் பலர் முனைந்து பல விடங்களில் சுய மரியாதை சங்கங்களும் மகாநாடு களும் நடத்த முனைந்த விட்டதும் தக்கசான்றாகும். சுயமரியாதைச் சோதியின் முன்னே வைதிக இருள் எவ்வாறு நிற்றல் சாலும்.

சுயமரியாதை இயக்கத்தின் நோக் கம் சுயராட்சியம் அடைவதேமக்கள் சுயராட்சியம் என்னும் இன்ப நிலை யத்தையடையச் செல்வதற்குப்பாதை யில் தடையாயிருக்கும் கல் முள் போன்ற ஜாதி சமயம் சாத்திரம் மூட நம்பிக்கை முதலிய தீய பழக்க வழக் கங்களை ஒழித்து மக்கள் நேரான பாதையில் சீராக பார்ப்பானும் பறை யனும், தோளோடு தோளுற ஒற்று மையாய் சகோதரத்வமாய் செல்வதற் கே தோன்றியதென்று சுயமரியாதை இயக்கமாப்பெரும் தலைவர் ஈரோட்டு இராமன் அடிக்கடி கூறிவந்ததும் உயர் திரு. ஆர். கே. ஷண்முகம் எம். எல். ஏ. விருதுநகரில் "சுயமரி மரியாதை இயக்கம் வெற்றி பெறு விடில் காங்கிரஸ் கோரிய சுயராஜ்யம் கிடையாது. காங்கிரஸ் சுயமரியாதை இயக்கத்தைக் கண்டித்தால் நான் காங்கிரசினின்று விலகிவிடுவேன்" என்று மொழிந்த மெய்யுரைகளின் பொருளையும் உணராது சில தேசிய வெறியர்கள் சுயமரியாதை இயக்கம் இந்தியர் சுயராட்சியம் பெற இடை யூறியற்றுகிறது என்று பொய்ப்பிர சாரம் பண்ணிவந்ததுடன் உலகம் தெரியா உன்மத்தர்கள் சிலர்கள் குடி அரசுப்பத்திரிகை காங்கிரஸ் இயக்கத் திற்கு விரோதமாய் நின்றதினால் அதன் சந்தா மிகவும் குறைந்து விட் டது என்றும் பொய்பிரசாரம் கூடப் பண்ணுகின்றனர் ஓர் மாதத்தில் சில சந்தாதாரர்கள்பத்திரிகைகளைநிறுத்த லாம். அடுத்த மாதத்தில் பல சந்தா தாரர்கள் புதிதாய்ச் சேரலாம். இது வே பத்திரிகை உலகில் இயற்கையில் நடைபெறும் செயல்கள். இவ்வாறு குடி அரசுப்பத்திரிகைக்கும் ஏற்பட் டிருக்கலாம். அஃதன்றி இவ்வருட ஆரம்பத்தில் குடி அரசுப் பத்திரிகை க்கு சென்ற ஆண்டிருந்த சந்தாவிற்கு குறைவில்லையென்றும், வேண்டுமா னால் அதிகப்பட்டிருக்கலாம் என்றும் குடி அரசுப் பத்திரிகை ஆபீசின் பொறுப்புள்ள ஓர் உத்தியோகஸ்தர் மூலம் அறிந்தேன். எனவே சுயமரி யாதை இயக்கத்தின் எதிரிகள் சமய த்தின் பேராலும் தேசத்தின் பேரா லும் இவ்விதமான பல பொய் மொழி யால் அவ்வியக்கத்தை அழித்து விட லாம் என்ற எண்ணத்தை ஒழித்து விடுவார்களாக. மெய்யே வெற்றி பெறும், பொய் அழிந்துவிடும். அழி ந்து வருகிறது என்றதை உணர்வ தோடு சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் நாட்டில் நிலவு முன் சுயராஜிப் பேறுபெறலிதே என்ப தையும் ஒரு சமயம் பல சூழ்ச்சிமுறை யால்வெள்ளைச்சாரனிடமிருந்து இந்தி நாட்டைப் பிடுங்கி விட்டாலும் உண் மைச சுயராச்சியததைக் காணமுடை யாது என்பதை அறிவாளர்களாக. நாட் டில் சாந்தியும் சமாதானமும் நில வாது ஜாதிப் பூசல், சமயப் பூசல் பல மலிந்து நாடெங்கும் இரத்த ஆறு பெருகுவதோடு கூடிய சீக்கிரம் வேறு நாட்டாரிடம் அடிமையாகச் சிக்கி அவதிபட நேரிடும்என்பதுமெய். இதன் உண்மையைத் தான் அறிஞர் ஒருவர் "வெளிப்பார்வையில் நாம் சுதந்தரத்தைப் பெற்றாலும் அஃது பார்வைக்கு அழகிய ஓர் கனிந்த பழம் போன்றிருக்கும் உரித்துப்பார்த்தால் உள்ளெல்லாம் சொத்தையாயிருக்கு மேதவிர வேறில்லை" என்ற மெய் மொழியின்படி உண்மையான விடு தலையை இந்தியா பெறவேண்டுமாயின் சுயமரியாதை இயக்கத்தின் கொள் கைகள் நாடெங்கும் பாவவேண்டும். உண்மையாகவே சுயராஜியத்தை விரும்புபவர்கள் சுயமரியாதை இயக் கம் வெற்றி பெற உழைக்க முன் வரு வார்களாக. இதன் உண்மையைய றிந்து உலகத்தின் பலபாகத்தின் மக் களிற் பலர் தலைவராகவும்கடவுளின் அவதாரமாகவும் மதித்துக் கொண்டி ருக்கும் கிருஷ்ணமூர்த்தி என்பவர்,

"நமது சொந்த அறிவை உபயோ கித்தமால், இது வெரு நாளாகக் கை யாண்டு வந்த சம்பிரதாயம் தல்லது பழக்க வழக்கம், என்று ஒன்றைச் செய்யும் மனப்பான்மையே சுதந்தர வாழ்வின் உண்மையான விரோதி. உயிரற்ற உலர்ந்த போன பழங் காலத்து கோட்பாடுகளால் தற்கால வாழ்வை வளரவிடாமல் கட்டுப்படுத்தி அடிமையாக்கும் மனப்பான்மையே சுதந்தர வாழ்வின் உண்மையான விரோதி. பழங்காலத்து கோட்பாடு களும் சம்பிரதாயங்களும் இந்தியா வைக் கட்டுப்படுத்தி மூச்சுப்போகும் வண்ணம் திணறச் செய்வது போல உலகத்தில் வேறு எந்த நாட்டையும் செய்பவில்லை. இந்தியாவிற்கு இப் பொழுது ஏற்பட்டிருக்கும் பெரிய கஷ்டம் இஃது ஒன்றே. இந்த ஒரு பெரும் சங்கடத்தைப் போக்குவீர்களா னால் இந்தியாவை முன்னேற்ற மடைய விடாமல் தடுக்கும் இடையூறு கள் யாவும் சூரியனைக் கண்ட பனி போல் மறைத்து விடும். மனித வாழ் வின் நியதிகளுக்கும் விரோதமாக யார் தான் செல்ல முடியும்? அதனை எமாற்ற ஒருவராலும் முடியாது" என்ற ஆழ்ந்த அறிந்து கூறிய அரிய மொழி ஆராய்ந்தால் சுயமரியாதையிய க்கக் கொள்கைகளே இந்தியாவிற்கு உண்மையான சுயராஜியத்தை அளிக்க வல்லதுஎன்பது நன்கு விளக்கும். சுய மரியாதை இயக்கம் திரு. கிருஷ்ண மூர்த்தியின் கொள்கைகள் பலவற்றை கருத்துவேற்றுமை கொண்டிருந்தா லும் உண்மையாய் தம் மனதில் கண்ட வைகளை ஒளியாது வெளியிட்டதற்கு நாம் அவரைப் போற்றுகின்றோம்.

காங்கிரஸ் மகாசபை பல அறிவாளர் களை அங்கத்தவராயும் பல வீரர்களைத் தலைவராயும் கொண்டிருந்தா லும் அஃது உண்மைச் சுயராஜ்யத்தை அண்மையில் காணும் வழியில் வேலை செய்பவில்லை. காங்கிரஸ்கட்டும் சுய ராஜ்ய மனிசைக்கு போதிய அஸ்திபா ரமிடாத மேலே கட்டிடத்தை கட்டு வதினால் அடிக்கடி அச்சுவர்கள் மேலே வீழ்ந்து விட்டது, வீழ்ந்து வருகிறது. காங்கிரசால் தோற்றுவிக்கப்பெற்றதற் காலக்கிளர்ச்சிகள் முதலில்வீறுகொண் டெழுந்தது உண்மையே ஆனால் தற் காலம் அஃது எங்கிலையிலிருக்கின்றது என்று ஆராய்வார்க்கு உண்மை புலனு காமற் போகாது. சுயமரியாதை இயக் கத்தலைவரும் இதைத்தான் ஆதிமுதல் கூறுகிறார்கள். எனவே மக்களின் சக் தியை பயனற்ற வழியில் தூண்டி முடி வில் தோல்வி ஏற்படச் செய்வதிலிரு ந்து நாட்டின் நன்மைக்காக கிளர்ச்சி செய்யும் சக்தி மக்களிடையே தளர்ச் சியடைந்து விடுகின்றது. பயனற்ற வழிகளில் மக்களின் சக்திகளை வீணாக் குவதினால் மக்கள் அடைத்துள்ளதுயர் பிலும், சோர்விலும் நின்று உணர்ச்சி பெற்று கிளர்ச்சியை மீண்டு பண்ணு தல் அதிகசிரமம். ஆகவே தற்காலத்தில் நடந்துவரும்உப்புச்சத்யாக்ரகப்போரில் மக்கள் தம் சக்தியை செலவிடுவதை விட தீண்டாமை, பார்க்காமை, பால்ய விவாஹம், விதவை மணம், மூட நம்பி க்கை முதலியவைகள் ஒழிந்து உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி, பணக்காரன், ஏழை, தொழிலாளி, முதலாளி ஆண் பெண் முதலிய சகல பேதங்களும் அற்று அன்புடன் ஒன்றாய் குழுமி சுயராஜியத்தை கடவுள்களின் அதே நிமிஷத்தில் வெள்ளைக்காரர் கள் இங்கு நமக்கு வேலையில்லை என்று தம் பெண்சாதி பிள்ளைகுட்டி மூட்டை முடிச்சுகளுடன், சீமைக்குப் பிரயா ணமாய் விடுவார்கள். இத்தலைய நிலை யையடைய நாடெங்கும் "சமதர்மசாத் தீகப்போர்" எழல் வேண்டும். என்று இங்காட்டில் அப்போர் ஆரம்பிக்குமோ அன்றே உண்மையான விடுதலைக்கு பலமான அஸ்திவாரமிடும் தன்னலா கும். இதுபற்றி திரு. கிருஷ்ணமூர்த்தி "நமது வாழ்வில் பிறர் நலம் கருதும் தன்மையும், பிறர்மேல் உண்மையும் இல்லாமற் போயின. தொன்று தொட்டு வழங்கி வந்த கோட்பாடு

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

இதிகாசங்கள்

மகாபாரதம்—ஆதிபர்வம்.

கட்டுரை 7.

(திரு. சந்திரசேகரப்பாவலர்.)

[அத்தியாயம் 16 முதல் 19 முடிய]

கசியப முனிவன் தக்கனுடைய பெண்களாகிய கத்ருவையும் வினதையையும் மணந்தான். அவன் அவர்களுக்கு வரம் தருகிறேனென்று சொல்ல கத்ரு தனக்கு ஒரே உருவுள்ள ஆயிரம்பாம்புகள்பிறக்கவேண்டும் என்றும் வினதைகத்ருவினுடையபிள்ளைகளைக்காட்டிலும் வலிமையுள்ள இரண்டு பிள்ளைகளைப் பெறவேண்டுமென்றும் வரம் கேட்டுப் பெற்றனர். நீண்ட காலத்தின் பின் கத்ரு ஆயிரம் முட்டைகளையும், வினதை இரண்டு முட்டைகளையும் ஈன்றனர். அவைகளை வேலைக்காரிகள் வேண்டிய அளவு வெப்பமுள்ள பாத்திரங்களில் ஐந்நூறு ஆண்டுகள் வைத்திருந்தனர். பின் ஆயிரம் முட்டைகளிலிருந்தும் பிள்ளைகள் வெளிவந்தனர் வினதை தனது இரண்டு முட்டைகளும் பொரியாமலிருப்பதைப் பார்த்து வருந்தி ஒன்றை உடைத்தாள். அதில் உடம்பின் மேற் பாகம் முற்றுப் பெற்றும் கீழ்ப் பகுதி ஒன்றுமே இல்லாத ஒரு பிள்ளையைக் கண்டாள். அம்மகன் சினம் மிகக்கொண்டு, "அம்மா! நீ ஐந்நூறு ஆண்டுகள் கத்ருவுக்கு அடிமையாவாய், என்னே இப்படி உடைத்தாயே. என்னைப்போல் மற்றை முட்டையையும் உடைத்து விடாதே. இன்னும் ஐந்நூறு ஆண்டுகள் காத்திரு", என்று சபித்து விண்ணிற் போய் நின்றான். அந்த அருணனே சூரியன் தன் சாரதியாக வைத்துக் கொண்டான். அதிலிருந்து ஐந்நூறு ஆண்டுகள் கழிந்தபின் மற்றைய முட்டையிலிருந்து கருடன் பிறந்து விண்ணில் உணவு தேடிப்பறந்தான். அப்போது உச்சைச்சரவம் என்னும் தேவலோகக்குதிரை அங்கே வந்தது. தேவர்களனைவரும் மேருமலைமேலிருந்து கொண்டு அமுதம் பெற எண்ணினர். திருமால் திருப்பாற்கடலைக்கடையச் சொன்னான். ஆதிசேடன் பிடுங்கித் தந்த மந்தரமலையைக்கொண்டு போய் கடலை வினவ அது தனக்கும் பங்கு தர வேண்டிற்று. தேவர்கள் வேண்டுதலால் கடலாமை மலையைத்தாங்கிற்று. வாசுகி என்ற பாம்பைக்கயிறாகச் சுற்றி தேவர்களும் அசுரர்களும் கடலைக்கடைந்தனர். அசுரர் பாம்பின் தலைப்புறத்தும் தேவர் திருமால் நின்ற வாலின் பக்கத்தும் நின்றனர். கடலிலிருந்து தோன்றிய நஞ்சை அரன் உண்டான். பாம்பின் மூச்சு மேகமாகி மழை பொழிந்தது. மழையால்கடலிலிருந்த பிராணிகளெல்லாம் மாண்டன. மலைமேலிருந்த பிராணிகளும் மடிந்தன. கடலில் பல மரங்களின் பால்களும் மருந்துச் செடிகளின் சாறுகளும் விழ கடல் நீர்பாலாயிற்று. அதிலிருந்து முதலில் மூதேவியும் பின் சந்திரனும், இலக்குமியும், சுராதேவியும், வெள்ளைக்குதிரை காமதேனு ஐராவதமும் தோன்றின. பின் தன்வந்திரி அமுதக்குடத்துடன் தோன்றினான். திருமால் பெண்ணுருவுடன் அசுரர் மூன் நின்று மயக்கி அசுரர்களுக்கு மட்டும் அமுதம் கொடுக்க அதைத் தெரிந்த இராகு என்ற அசுரன் தேவ உருவுடன் அமுதம் குடித்தான். அதைச்சந்திர சூரியர் காட்ட திருமால் இராகுவின் தலையை வெட்டினான். அதனால் இராகுவின் தலை தீராப்பகை கொண்டு சந்திர சூரியர்களை இன்னும் விழுங்கி வருகிறது. அசுரர் போர் தொடங்க திருமால் அவர்களைக்கொன்றான். தேவர்கள் அமுதக்குடத்தைக்கொண்டு போய்த் தமது உலகில் வைத்தனர். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

கத்ரு என்பவன் தனக்கு ஆயிரம் பாம்புகள் பிறக்கவேண்டுமென்று கேட்டமை உலக இயற்கைக்கு மாறுனதே. "பாம்பைக்கண்டால் படையும் விலகும்" எனப்பழமொழி விளங்க ஒரு பெண் தனக்கு ஆயிரம் பாம்புகள் பிள்ளைகளாகவேண்டுமென்றுவினவுவாளா?

அப்பெண்கள் கருக்கொண்டு முட்டைகளைப் பெற்றனராம். பதவைகளும் பாம்புகளுமல்லவோ முட்டையிடும்? மனிதர் முட்டையிடுவதை இக்கதையிலேயே கண்டோம்! உலக இயற்கைக்கு மாறுன கதைகளைச் சொன்னால் மட்டுமே அறியா மக்கள் மயங்கி ஏமாறுவார்கள் என்பதுதான் இக்கதைகளை உண்டாக்கினவர் நோக்கமாதல் வேண்டும்,

அம்முட்டைகள் வெப்பமுள்ளபாத்திரங்களில் வைத்து ஐந்நூறு ஆண்டுகள் அடைகாக்கப்பெற்ற பின் பாம்புகளாக வெளிப்பட்டனவாம்! மனிதனுக்கு அதிலும் முனிவனுகிய கசிய பனுக்கு நான்முகனுடைய மகன் பிள்ளை பேரத்தியாகிய கத்ரு வயிற்றில் முட்டைகளும் பாம்புகளும் பிறந்தமை எவ்வளவு வியப்பு!! இது தெய்வத்தன்மையே யாகுமல்லவா?! என்னே இழிதகைமையான கதைகள்?

வினதை தன் முட்டைகளில் ஒன்றை பொறுமையால் உடைக்க உடம்பின் மேற் பாதி மட்டும் உடைய ஒரு மகன் (அருணன்) பிறந்தானும்! அரைக்குக்கீழ்ப்பட்ட பகுதியில்லாத அப்பிள்ளை ஆண் என்று யார் எங்ஙனம் கண்டனரோ? அப்பிள்ளை பிறந்தவுடனே தன் தாயைச் சபித்து விண்ணிற் போய் சூரியனுக்குச் சாரதியானான் என்பதும் அறிஞர் வேறுத்துத்தள்ளும் அறிவற்றார்கதையே. இதனைச் சிந்திக்கும் சிறுவரும் இதை ஒரு சிறிதும் நம்பாரன்றே? நொண்டி தேரோட்டிச் செல்லும் போது தார்க்கோல் அல்லது கடிவாளம் கை தவறிக் கீழே விழுந்தால் தலைவனுகிய சூரியன் தானே கீழே இறங்கி அதனைச்சாரதியிடம் எடுத்துக்கொடுக்கவேண்டும்? நல்லசாரதி, நல்ல அருளுடைத் தலைவன்!!

ஆயிரமாண்டுகளின்பின் மற்றைய முட்டையிலிருந்து கருடன் பிறந்தானும்! முட்டைகள் அதிகமாயின் பத்துப்பதினைந்து நாட்களிலே பொரிக்கப்பெறும், இவை ஐந்நூறு ஆயிரம் ஆண்டுகள் கழிந்து பொரிந்தமை எவ்வளவு வியப்பு! ஆயிரமாண்டுகளின்பின் மனிதரீன்ற முட்டையிலிருந்து வெளிப்பட்ட பறவையாகிய கருடனை அறியாமக்கள் பெருமையாக மதிக்க இங்ஙனம் தானே கதை கட்டவேண்டும்!!

கடல் வாய், திறந்து தேவரிடம் பங்கு கேட்டதாம்! கடல் ஆமை, மந்தரமலையைத் தூக்கி நின்றதாம்! அறிஞர் இப்பித்தலாட்டங்களைச் சிந்திக்கவேண்டுகின்றோம். பாம்பைக்கயிறாக மலைமேல் கட்டிக் கடல் கடையப்பெற்றதாம்! தேவர்கள் வால் பக்கம் திருமாலுடன் நின்று கொண்டு அசுரரைப் பாம்பின் தலைப்பக்கம் நிறுத்தினராம். தேவர்கள் எவ்வளவுசூரர்கள்? அடடா? திருமால் எல்லாருக்கும் மூந்தி வாலண்டை நின்றதே மிக வியப்பு! பாம்பு கடிக்குமென அஞ்சினர் போலும்! கடலிலிருந்து நஞ்சு, மூதேவி, சீதேவி, காமதேனுவென்ற பசு, தன்வந்திரி, கற்பகமரம் இவைகளெல்லாம் தோன்றினவாம்! இவர்களெல்லோரும் கடலுக்குள் எங்ஙனம் அதுவரை இருந்தனர்? இவர்களைக்கடலுக்குள் பெற்றது யார்? இவை போன்ற விஞ்சைகளுக்குவிடையில்லை கதையில்! திருமால் பெண்ணுருவாகி அசுரரை மயக்கி தேவருக்கு மட்டும் அமுத மூட்டி அசுரரைக் கொன்றமையே பேரருளுடைய தெய்வத்தின் இலக்கணம்!!

சந்திரன் கடலிலிருந்து தோன்றுமுன் உலகில் இரவு முழுவதும் இருட்டாகவே இருந்திருக்கவேண்டுமல்லவா? சந்திரனைக்கடலில் கருக்கொண்டு பெற்ற பெண்மணியாவளோ? அப்போது தான் கடலிலிருந்து பிறந்த சந்திரன் சூரியனுடனேகூடி அமுதமுண்ண வந்த இராகுவைக்காட்டிக்கொடுத்தானும்! அதனால் இராகு சந்திர சூரியர்களை விழுங்குகின்றதாம்! அதுதான் கிரகணமாம்! என்னே அறிவின்மை! இக்கதையை இக்காலத்திலுள்ள நம்பும் அறிவிலார் பலர் கற்றுத்தேர்ந்த பட்டதாரிகளிலும் உளர். அவர்கள் பட்டங்களும் அறிவும் பாராட்டும் தகையனவே!!

பூமியின் நிழல் சந்திரன் மேல் விழுந்து அதன் ஒளியை மறைப்பதே சந்திர கிரகணமென்றும், சந்திரன் பூமிக்கும், ஞாயிற்றுக்கும் இடையே நின்று ஞாயிற்றின் ஒளி பூமியில் படாமல் மறைத்தலே சூரிய கிரகணமென்றும் பண்டைகாலத் தமிழ் மக்கள் கணித நூற்கள் கூறவும் இத்தகைய அறிவற்றூர் கொள்கை தமிழ் நாட்டில் பரவியது மிக வியப்பே. இனியாவது இவ்வறியாமை மக்களை விட்டு விலக மெய்யறிவு அவர்களிடத் தோன்றுமெனவும், இவ்வறிவிலாக் கதைகளை நம்பி கிரகணகாலங்களில் செய்யும் அறிவற்ற கிரியைகள் அழிந்தொழியுமெனவும் நம்புகின்றோம். அந்நற்காலம் விரைவில் தோன்றுவதாக. இனிமேற் செல்லுதும்.

தூத்துக்குடி.

சேந்தமிழ் வாலிப சன்மார்க்க சங்கம்.

மேற்படி சங்கத்தின் 2-வது ஆண்டு நிறைவுவிழா, நாளது மாசி மாதம் 2 தேதி [13-2-31] செவ்வாய்க் கிழமையதினம் திங்களூர், அப்பிச்சி மார் மடம் வக்கீல்தார் உயர்திரு எம். ஏ. தெய்வசிகாமணிக் கவுண்டர் பி.ஏ.,பி.எல்., அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அவ்வமயம் ஈரோடு "குடி அரசு" ஆசிரியர் உயர்திரு ஈ. வெ. இராமசாமியாரும், இன்னுஞ்சில அன்பர்களும் விஜயம் செய்து சொற்பொழிவாற்றுவார்கள்.

சங்கமூலதன அபிவிர்த்திக்கெனச் சங்க அங்கத்தினர்களால் அன்றிரவு ஒரு நாடகம் கவினமுறையில் நடத்தப்படுமென காரியதரிசி அறிவிக்கிறார்,

---

நஞ்சக்கவுண்டன்பாளையம்.

பார்ப்பனீயமொழிந்த திராவிடப் பிரவேசம்:— கோபியை யடுத்த நஞ்சக்கவுண்டன் பாளையம், மிராசுதார் திரு. மாரப்பகவுண்டரவர்கள், தமது குமாரர் திரு. மா. நல்லசாமிக் கவுண்டரவர்களால் கட்டிமுடிக்கப்பட்ட புது வீட்டின் திராவிடப்பிரவேசம் 1-2-31ல் பார்ப்பனப் புரோகிதமின்றி, சுயமரியாதைக் கொள்கைப்படி நடைபெற்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கரேநகரில் ஆதிதிராவிடர் ஆண்டுவிழா

திரு. இராமசாமி சொற்பொழிவு

ஈரோடு தாலூகா பெருந்துறைக் கடுத்த கரேநகர் என்னும்ஊரானது கானலாயிருந்ததை பாதிரிகள் மூலம் ஆதிதிராவிடர்களுக்கு ஆளுக்கு 5 அல்லது 6 எக்கரா பூமி வீதம் 100 பேர்களுக்கு பட்டா பதிவு செய்து கொடுக்கப்பட்டு அங்கு 100 வீடுகளும் கட்டிக்கொடுத்து அவர்களுக்கு லேபர் கமிஷனர் மூலமாகவும், கோவாப்பரேட்டிவ் டிபார்ட்மெண்டு மூலமாகவும் வேண்டிய சௌகரியங்களும் செய்து கொடுத்து குடியேற்றிய செட்டில்மெண்டாகும். அங்குள்ள ஆதிதிராவிடர்கள் முச்சால்வாசி கிறிஸ்துவ ஆதிதிராவிடர்களும் கால்வாசி இந்து ஆதிதிராவிடர்களுமாவார்கள்.

அவர்களது கிராம வீடுகள் ஓலை வீடுகளானாலும் மிக்க அழகாகவும் சுகாதார முறைப்படியும், ஒழுங்காக விட்டு விட்டுத் தெருக்கள் அமைத்தும், வீடுகளுக்கு முன்புறமும் பின்புறமும் இடங்கள் விட்டும், முன்பின் வாசல் முதலியவைகள் சுத்தமாகவும் இருந்தன.

அந்த ஜனங்களும் கூடுமானவரை ஆண்கள்படித்தவர்களாகவும்,பெண்களும்சுத்தமாகவும்,நடைஉடைபாவனைகளில் கண்களுக்கு அகியாய்த்தோன்றுமல் நாகரீக அதாவது பட்டணங்களில் வசிக்கும் மக்கள் போன்ற தோற்றமாகவும் காணப்பட்டார்கள். கூடுமானவரை அதாவது 100க்கு 75 பேர் குடி இல்லாதவர்களாகவும், பத்திரிகை முதலிய வர்த்தமானங்களில் ஊக்கமும் சிரத்தையும் கவலையும் கொண்டவர்களாகவே காணப்பட்டார்கள்.

இவர்களுக்காக மிகுதியும் இந்த 2, 3 வருஷ காலமாய் உழைத்து வந்தவர் கோவாப்பரேட்டிவ் டிபார்ட்மெண்ட் இன்ஸ்பெக்டர் திரு. நடராஜ பிள்ளையவர்களாவார்கள்.

மற்றும் ஷெட்யூல் மெண்டுக்கு பக்கத்திலுள்ள அப்பிச்சிமார் மடம் மடாதிபதி திரு ஆண்டமுத்துக் கவுண்டரவர்களுடையஆதரவும், ஈரோடு லண்டன் மிஷின் பாதிரியார், உபதேசியார் ஆகியவர்கள் மேற்பார்வையும், பெருந்துறை திரு என். லட்சுமண முதலியாரவர்களின் உபதேசம் முதலியவைகளுமாகும்.

செட்டில்மெண்டிலுள்ள வாலிபர்கள் குடி அரசு, சுயமரியாதை முதலிய கொள்கையில் பற்றுக்கொண்டு பிரசாரம் செய்வதும் உண்டு.

இப்படிப்பட்ட ஊரில் 26-1-31 தேதி பகல் 3 மணிக்கு ஒரு ஆதிதிராவிட ஆண்டு மகாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அதற்கு அப்பிச்சிமார் மடாதிபதியவர்கள் சகோதரர் திரு எம். பழனிச்சாமி கவுண்டரவர்கள் தலைமை வகித்தார். திரு. ஜான் அவர்கள் வரவேற்பு உபன்யாசம் செய்தார். உபதேசியார் திரு என். எம். ஜோசப்பவர்கள் வரவேற்புப்பத்திரம் வாசித்தார். வாலிபர்கள் பலர் பஜனை செய்ய தலைவர் முதலியவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். முக்கியமானவர்களுக்குச் சித்தண்டி வழங்கப்பட்டது. கூட்டம் சரியாய் 3-30 மணிக்கு கூடுவக்கப்பட்டது.

தலைவர், முகவுரையும், வரவேற்பு உபன்யாசமும் நடத்தவுடன் பெருந்துறை திரு. என். லட்சுமண முதலியாரவர்கள் "புதிய உணர்ச்சி" என்பதைப்பற்றியும், திரு ஈ. வெ. இராமசாமியார் "சமரசசன்மார்க்கம்" என்பதுபற்றியும், திரு. கே. வி. அழகிரிசாமி அவர்கள் "ஆரியக்கட்டவுள் ஆதிதிராவிடக்கடவுள்" என்பதுபற்றியும், விவசாய இலாக்கா இன்ஸ்பெக்டர் திரு. சுப்ரமணிய பிள்ளையவர்கள் "விவசாயம்" என்பதுபற்றியும், கோயமுத்தூர் ஜில்லா மதுவிலக்குகமிட்டி ஆபீஸ் காரியதரிசியும் மதுவிலக்குப் பிரசாரகரும் சுகாதார இன்ஸ்பெக்டர் முதலியவர்களால் மதுவிலக்குப் படக்காட்சியும் காட்டப்பட்டது. மற்றும் பலர் பேசினார்கள். லண்டன்மிஷின் பாதிரியார் மிஷின் சம்பந்தமாக பல விஷயங்களைப்பற்றியும் பேசி, கூட்டம் முடிவடைந்தது. கூட்டத்திற்கு கோவை, ஈரோடு, பெருந்துறை, விஜயமங்கலம் மற்றும் சுற்றுப்பக்கங்களிலிருந்து அனேகம் பேர்கள் ஆதிதிராவிடர்களாதவர்களும் வந்திருந்தார்கள். பெண்கள் சுமார் 100 பேர்களும், ஆண்கள் சுமார் 400 பேர்களும் விஜயம் செய்திருந்தார்கள். ஆதிதிராவிடர்களுக்கு அன்று இரவு பெரிய விருந்து வடதரப்பட்டது. பத்தாகள் பெரிதாய்ப் போட்டு, வாழைக்கம்பம் வாழை முதலியன கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மகாநாட்டிலிருந்து திருவாளர்கள். சே. வி. அழகிரிசாமி. கணேச முதலியார், ஈ.வெ.இராமசாமி, அசங்கமையா முதலியவர்கள் ஒற்றைமாட்டுவண்டியில் 10மைல் வந்து பிறகு மோட்டார் மூலம் ஈரோடு சென்றார்கள்.

இந்த மகாநாடானது அந்த சமூகத்திற்கும் மற்றும் சுற்றுப்பக்க சமூக மக்களுக்கும் ஒரு புதிய உணர்ச்சி ஏற்படுத்தியது என்றே சொல்லவேண்டும். சமீபத்தில் மற்ற செட்டில்மெண்டுகளிலும் இது போல் சில மகாநாடுகள் நடைபெறுமென்று தெரியவருகிறது.

திரு. ஈ. வெ. இராமசாமியின் சொற்பொழிவு சுருக்கம்.

சமரசசன்மார்க்கம்.

சகோதரிகளே! சகோதரர்களே!!

சமரச சன்மார்க்கம் எனபது வாயால் சொல்லக்கூடியதே தவிர காரியத்தில் நடக்க முடியாததாகும். எனெனில் எது எது சமரச சன்மார்க்கம் என்கின்றோமோ, எது எது உண்மையான—இயற்கையான சமரச சன்மார்க்கமென்று கருதுகின்றோமோ அவற்றிற்கு நேர் விரோதமாகவே மனித வாழ்க்கை அமைக்கப்பட்டிருக்கின்றது இதுநமதுநாட்டில் மட்டும் அல்ல உலக முழுவதிலுமே அப்படித்தான் அமைக்கப்பட்டுப்பேயிற்று. ஆனால்நமது நாட்டில் மற்ற நாடுகளைவிட ஒரு தூரம் அதிகமான வித்தியாசம் வைத்து அமைக்கப்பட்டு விட்டது.

முதலாவது கடவுள், மதம், விதி, ராஜா, ஜாதி, பணம், தொழில் முதலாகியவைகள் இயற்கைக்கு மாதிரமான சமரச சன்மார்க்க மல்ல மல்ல நியாய பூர்வமான சமரசசன்மார்க்கத்திற்கும் விரோதமாய் அமைக்கப்பட்டிருக்கின்றது இந்நிலையில் ஒருவன் சமரச சன்மார்க்கத்தைப்பற்றி பேசவேண்டுமானால் மேற்கண்ட கடவுப்பாடுகளை வைத்துகொண்டு சமரச சன்மார்க்கம் ஏற்படவேண்டுமென்கின்ற முறையில் போகியாதாவாலோ, அறிவாளியாவாலோ பேசமுடியாது. ஏனெனில் அவை ஒன்றுக்கொன்று முரணபட்ட தத்துவத்தில் அமைக்கப்பட்டிருப்பவைகளாகும். அதேபோல் மாத்திரமல்ல மனிதசமரசமும் சன்மார்க்கமும் கூடாது என்னும் தத்துவத்தின் மீதே அமைக்கப்பட்டவைகளாகும்

ஆகையால் நான் சமரசசன்மார்க்கத்தைப்பற்றி பேசவேண்டுமானால் அவைகள் சம்மந்தமான கட்டுப்பாடுகளையெல்லாம் அடியோடு அழிப்பதுதான் சமரச சன்மார்க்கம் என்று சொல்லவேண்டியதாயிருக்கின்றது. இது உலகவில் பலருக்கும் உலகள பாதிரிமார்கள், எஜமானர்கள், அக்கம்பக்க ஜாதியார்கள், சாமிகள், மதகாரர்கள் ஆகியவர்களுக்கு வருத்தமாயும் விரோதமானவைகளாயிருக்கும் என்று கருதுகின்றேன். நான் உண்மையான சமரசசன்மார்க்கம் அடைந்த தேசத்தார், அடைந்த சமூகத்தார், அடைந்த தனிமனிதர்கள் என்று யார் யாரைக் கருதுகின்றேனோ அவர்கள் எல்லாம் மேற்கண்ட இடையூறுகளைவேரோடுகளைந்து தெரிந்து தான் சமரச சன்மார்க்கம் அடைந்தார்கள்—அடைகின்றார்கள்—அடைய முயற்சிக்கின்றார்கள். இவைகளில் சிறிது தாட்சண்யப்பட்டவர்கள் கூட தோல்வியே யடைந்து விட்டார்கள்.

உதாரணமாக கடவுளையும் மதத்தையும் பணக்காரனையும் வைத்து சமரச சன்மார்க்கம் செய்ய முடியாதென்று கருதித்தான் ருஷியர்கள் பாதிரிமார்கள் தொல்லையையும் சர்ச் சுரண்டலையும் பணக்காரத்தன்மையையும் அழித்துத்தான் சமரசமடைந்தார்கள். தற்போதைய ருஷிய சமதர்ம சமரசத்திற்கு பாதிரிமார்கள் எதிரிகளென்றே தீர்மானிக்கப்பட்டு அவர்களை அழித்து விட்டார்கள். அழித்து விட்டார்கள் என்றால் கொன்று விட்டார்கள் என்பது கருத்தல்ல. ஏதோ சிலரை ஆரம்பத்தில் சமரசத்திற்கு எதிர்ப்பிரசாரம் செய்தவர்களில் சிலரைத் தவிர மற்றவர்களை பட்டாளத்தில் சேரச் செய்தார்கள் சிலரை விவசாயத்தில் போட்டார்கள். சிலரை வைத்தியத்தில் போட்டார்கள். வேறு காரியங்களுக்கு உதவாதவர்களை காவல் காக்கப் போட்டார்கள். அதுபோலவே சர்ச்சுகளை தொழிற்சாலை பள்ளிக்கூடம் முதலியவைகளாக மாற்றினார்கள். இவைகளுக்கு உதவாமல் பேசுவதும் மற்ற சௌகரியங்களுக்கும் இவை யாதொரு இடையூறுகளை இழுத்தார்களோ அவைகளை பணக்காரர்கள் சொத்தைப் பிடுங்கி பொதுவான சொத்தாக்கி பூமி இல்லாதவர்களுக்கு பூமி, தொழிலில்லாதவர்களுக்கு தொழில், படிப்பில்லாதவர்களுக்கு படிப்பு முதலாகிய வைகளை கொடுப்பதற்கு உபயோகப்படுத்தினார்கள். கையாண முறைகளை ஒழித்து பெண் அடிமையை தீர்த்து ஆண்களை கண்டபடி பண்ணிக்கொள்ளும் பெரு முறையை நிறுத்தி செய்து, அளவுபடுத்தி ஆண் பெண் வாழ்க்கை இன்பத்திற்கு சௌகரியமாய் செய்தார்கள் இன்னும் பல நியாயங்கள் செய்தார்கள் ஆனால் நாங்கள் இவை பொருந்துமா எனறு சில கேட்பார்களே? யார் கேட்பார்கள் என்றால் பணக்காரன், பாதிரி, உயர்ந்த ஜாதிக்காரன், அரசன் ஆகியவர்கள்தான் கேட்பார்கள். இவர்களை நாம் கட்டு ஜனத்தொகையில் 100க்கு 5 அல்லது 6 பேர்களே இருப்பார்கள். மற்றவர்கள் 100க்கு 90க்கு மேற்பட்டவர்களாவார்கள். ஆகவால் குறைந்த எண்ணிக்கை உள்ளவர்கள் அதிலும் தங்கள் சுயநலத்திற்கு என்ன சில கட்டுப்பாடுகள இருக்கவேண்டுமென்றால் யார் சமமதிப்பார்கள்? முதலாவது உங்களைக் கேட்கின்றேன். நீங்கள் இந்த மூன்று ஆதிக்கத்தை ஒப்புக் கொள்ளுகின்றீர்களா? இருக்கவேண்டும் என்று சொல்லுகின்றீர்களா? என்ன சொல்லுகின்றீர்கள்? (சிரிப்பு) ஆகவே இம்மூன்றும் ஒழிய அவர்கள் கஷ்டப்படுவார்கள். ஆனால் நமக்கு இன்றே அம்மூன்றும் ஒழிய வேண்டுமென்கின்றஆதாரமுமில்லை. எனெனில் இன்னும் அநேகர்கள் இருக்கின்றனர். அவை இப்போது தான் முயற்சித்திருக்கின்றது. ஆகையால் வரிசைக்கிரமத்தில் அந்த முறை நமக்கும் வரும் என்கின்ற தைரியம்

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

பிரசமயமும் நம் (இந்து) சமயமும்

(ஒரு இந்துப்பெண்)

இன்றையதினம் உலகத்திலுள்ள 180 கோடி ஜனங்களுக்கு முக்கியமாய் 4, 5 மதங்களே பெரும் பெரும் மதங்களாயிருக்கின்றன. அவற்றுள் கிறிஸ்துமதத்திற்கு 60 கோடியும், பௌத்த மதத்திற்கு அதன் உட்பிரிவுகளையும் சேர்த்து 65 கோடியும், இஸ்லாம் மதத்திற்கு 30 கோடியும், இந்து மதத்திற்கு 20 கோடியுமாக இருக்கின்றதாலும், இந்து மதம் தவிர மற்ற மதங்கள் எல்லாம் வேறு மதங்களில் இருந்து வருகின்றவர்களை யெல்லாம் தங்கள் மதங்களில் சேர்த்துக்கொள்ளுவதும், காலுக்கு கால் தங்கள் மதங்களை விஸ்தரித்து செய்வதும் தங்கள் தங்கள் மதங்களில் உள்ள மக்கள் எல்லோரையும் சமமாகக்கருதி ஒற்றுமைப்படச்செய்வதுமான முயற்சியில் எல்லோருக்கும் சமமான கல்வியும், வாழ்க்கையில் சரி சுதந்திரமும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் இந்து மதம் என்பதில் மாத்திரம் மனிதனை மனிதன் பிரித்துகாட்டி கீழ்மேல் உயர்வு தாழ்வு நிலையை உண்டாக்கி வேறு மதத்தில் இருந்துவரும் எவனையும் சேர்க்காமலடித்து இந்து மதத்திலிருந்தும் அநேகரை வேறு மதத்திற்குப போகும்படி நிர்ப்பந்தப்படுத்தி ஜன சமூகத்தை வருஷத்திற்கு வருஷம் குறைத்துக்கொண்டே வரப்படுகின்றது.

மதக் கொள்கையைப்பற்றி பேசும் போது மாத்திரம் "இந்துமதம், அன்பு மதம, சமத்துவமதம், சபரச சன்மார்க்கமதம" என்று சொல்லுவதும்படக் கூடபோது மாத்திரம் சமரசமில்லை, சன்மார்க்கமில்லை, அன்பு இல்லை, இரக்கமில்லை என்பதும், மற்றும் மற்ற மதங்களில் இல்லாததத்துவங்கள் வேதாந்த சாரங்கள், ஞானங்கள் இந்து மதத்தில் இருக்கின்றது என்று பெருமை பேசிக்கொண்டு ஆத்மாவே கடவுள் என்றும், ஒரே ஆத்மா உலகிலெல்லாம் பிரகாசிக்கின்றதென்றும், எல்லா உடல்களிலிருக்கும் ஆத்மா ஒன்றே என்றும், அதற்குப்பற்றிலலை என்றும், அதற்கு சாவுஇல்லை பிறப்புஇல்லை என்றும், ஆதமா, கடவுள், தோற்றம் ஆகியவை மூன்றும் ஒன்றை ஒன்று பிரியாத தன்மையுடையதென்றும், இன்னும ஏதேதோ பித்துக்கொள்ளி போல் பேசி பெருமையடைந்துகொண்டு வாழ்க்கையில் அவை ஒன்றுக்கொன்று சிறிதும் சம்மந்தமில்லாமல் நடந்து மனித சமூகத்திற்கு பல கொடுமைகளை இழைத்துக்கொண்டு வருவதாயிருக்கின்றது.

மற்ற சமயக்காரர்களெல்லாம் தாங்கள் செய்யும் தருமங்களையும், காட்டும் மிரக்கங்களையும், புரியும் கர்மங்களையும் இந்தஉலகத்திலிருக்கும் மக்களுக்கு இந்தஉலகத்திலேயேநன்மை உண்டாகும்படியும் அதனுடைய பலனையிந்தஉலகத்திலேஅடைவதாகவும் சொலலிக் கஷ்டப்படுகின்ற ஜீவன் யாராயிருந்தாலும் தேவைப்படுகின்ற நீவன் யாராயிருந்தாலும் அவர்களுக்கெல்லாம் தங்களால் ஆனதை வித்தியாசமில்லாமல்தங்கள்மதமக்களுக்கும் நாட்டு மக்களுக்கும் பயன் படும்படியாக உதவி வருகின்றார்கள். மீதியுள்ளதை காட்டின் முன்னேற்றத்திற்கும் பொது மக்கள் சமூக முன்னேற்றத்திற்கும் உதவி பெரிய பெரிய நன்மைகளைச் செய்துவருகின்றார்கள். ஆனால் இந்துமதக்காரரோ தாங்கள் செய்வது மக்களுக்கு இந்த உலகத்திற்கு மன் படுகின்றதா என்பதை விட மேல் உலகத்திலுள்ளவர்கள் திருப்தியடைவார்களா? சந்தோஷம் டைவார்களா? நமக்கு வேண்டியதை அவர்கள் கொடுப்பார்களா? நாம் இந்த லோகத்தை விட்டுப்போன பிறகு மேல் லோகத்தில் நமக்கு நன்மை கிடைக்குமா? இந்த ஜன்மம் போன பிறகு அடுத்த ஜன்மத்தில் நமக்குப் பெருமையும் மேன்மையும் கிடைக்குமா? என்கிற கவலையிலேயே செய்வதன கஷ்டப்படுபவனையும் தேவைப்படுபவனையும் லக்ஷியம் செய்யாமல் யாருக்குக் கொடுத்தால் மேல் லோகத்தில் பலனுண்டு என்கின்ற கவலையின் மேல சுயநல எண்ணங்கொண்டு எவனெவன் தனக்குக்கொடுத்தால் அதிகமான பலன் மேல் லோகத்தில் கிடைக்கு மென்றும் கடவுள் தனக்கே கொடுக்கும்படி சொன்னார் என்றும் பித்தலாட்டமாய் அறிவுக்கும் அனுபவத்திற்கும் பொருந்தாததாய் எழுதிவைத்திருக்கின்றாரோ அவைகளை எல்லாம்நம்பி அந்தபடியேசெய்கின்றார்கள்.

மற்ற மதக்காரர் எல்லோரும் தங்கள் மதக்காரர்கள் நன்மைக்கும், மற்ற மதக்காரர்கள் நன்மைக்கும் என்று பள்ளிகூடம் கட்டி ஏராளமான பொருள் செலவு செய்து உபாத்தியாயர்களை வைத்து படிப்பு சொல்லிக்கொடுக்கின்றார்கள். இந்துமதக்காரர் கோவில்கட்டி ஏராளமான பொருள் செலவுசெய்து பார்ப்பார்களையும் தாசிகளையும் வைத்து உத்சவங்கள் செய்கின்றார்கள். படிப்பைப்பற்றியோ கவலையேயில்லாமலிருக்கின்றார்கள்.

மற்ற மதக்காரர்கள் மக்களின் நோய்களைச் சௌக்கியம் செய்ய ஆஸ்பத்திரிகள் கட்டிவைத்தியம் செய்கின்றார்கள். இந்து மதக்காரர்கள் நோய் வந்தாலும் காசில்லாமல் வேறு ஒரு ருவன் செய்யும் வைத்தியத்தைக்கூட செய்துகொள்ளாமல் அந்த நோய்க்கும் கடவுளை நம்பிக்கடவுளுக்கும் "சில்லரை தேவதை"களுக்கும் வேண்டிக்கொள்வதின் மூலமும் கோவில்களுக்குப் போய்ப் படுத்துக் கொள்ளுவதன் மூலமும் காசையும் நேரத்தையும் செலவு செய்து காயலாவைப்பலப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

மற்றமதக்காரர்கள் பெண்களுக்கு ப்படிப்புக்கொடுத்து அறிவு உண்டாக்கி வாழ்க்கையில் புருஷர்களுக்கு குடும்ப கஷ்டமில்லாமல் இருக்கும் படியாக பயன் பெருகின்றார்கள், இந்து மதக்காரர்கள் படிப்புக்கொடுக்காமல் போவதோடல்லாமல் ஏறக்குறைய 100க்கு 50 பெண்களுக்கு "பிசாசு" பிடிக்கச் செய்து பேயோட்டுகின்றார்கள்.

கடைசியாக கடவுள் விஷயத்திலும் 60 கோடி கிறிஸ்தவருக்கு ஒரே கடவுளாகவும, 65 கோடி புத்தர்களுக்கு ஒரு கடவுள்கூட இல்லாததாகவும், 30 கோடி முகம்மதியர்களுக்கும் ஒரே கடவுளாகவும், அதுவும் உருவம் பால் இல்லாததாகவும் இருக்கும்போது இந்துக்களுக்கு மாத்திரம் 20 கோடிப் பேருக்கு 33 கோடி கடவுள்களும் அவைகளுக்கும் கணவு, மூக்கு, கை கால்கள். அதுவும் ஒவ்வொன்றுக்கு ஆயிரக்கணக்கான கண்கள், இரண்டாயிரக்கணக்கான கைகள், பதினாயிரக்கணக்கான பெண்ஜாதி, பதினாறாயிரக்கனக்கானதாசிவேசிவைப்பாட்டிகள், பிள்ளை குட்டி மாமன் மாமி மைத்துணன் மாமனார் மருமகன் மருமகள் பேரன் பேத்தி கொள்ளும் பேத்தி முதலிய பந்து வர்க்கங்களுடன் இருக்கின்றன.

இவைமாத்திரமல்லாமல் மற்ற மதக்கடவுள்களுக்கு, பூசையோ, சாப்பாடோ, ஸ்நானமோ, வேஷ்டி துணியோ, கல்யாணம் கருமாதியோ கல்லெடுப்போ இல்லாமல் இருப்பதும், இந்துமதக் கடவுள்களுக்கு மாத்திரம் தினம் ஒரு வேளை, மூன்று வேளை, ஐந்து வேளையென்பதாக பல வேளை பூசையும், ஸ்நானமும், அபிஷேகமும், ஒவ்வொரு சாமிகள் பூசை நாள் 1க்கு 1 படி, 2 படி, 100 படி, 10 மூட்டை, 20 மூட்டை, 50 மூட்டை அரிசி வீதம் சமைத்து வைத்து ஆராதனை செய்வதும், மற்றும் பல பல விலையுயர்ந்த சாமான்கள் வைத்து நைவேத்தியம் செய்வதும், கணக்கில்லாமல் தாலிகள் கட்டுவதும் காசுகள் போடுவதுமான செலவுகள் செய்துவருகிறார்கள்.

மதத்தலைவர் அல்லது தெய்வீகத் தன்மை பொருந்தியவர்கள் என்பவைகளிலும் மற்றமதக்காரருக்கு ஒவ்வொருவரே உண்டு. அதாவது கிறிஸ்து சமயத்திற்கு கிறிஸ்து நாதரும், இஸ்லாம் சமயத்திற்கு மகமதுநபியும், பௌத்த சமயத்திற்கு புத்தரும் இப்படி ஒவ்வொருவரே உண்டு. ஆனால் இந்து சமயத்திற்கு முதலில் யார் என்று கண்டு பிடிப்பது கஷ்டமாகும். அப்படிக்கண்டு பிடித்துவிட்டால் பிறகு அவர்களைப் போல் நூற்றுக்கணக்காக ஆயிரக்கணக்காக லட்சக்கணக்காக அவதாரம், தேவர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், ரிஷிகள், முனிவர்கள் முதலாகிய தெய்வ அவதாரமும் தெய்வ அம்சமும் பொருந்தியவர்கள் கணக்கு வழக்கில் அடங்காத அளவு ஆகிவிடும்.

சமய ஆதாரங்கள் விஷயத்தில் மற்றசமயக்காரர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆதாரமே உண்டு. அதாவது கிறிஸ்தவருக்கு பைபில், இஸ்லாமானவருக்கு குர்ஆன், பௌத்தருக்கு திரிபீடகம் என்பவையாகும். ஆனால் இந்து சமயக்காரருக்கு 4 வேதம் 6 சாஸ்திரம் 18 புராணம் இவைதவிர அவர் சொன்னது இவர்சொன்னது உதாரணமாக, மனு சொன்னது, பாராசர் சொன்னது, ரிஷிகள் சொன்னது, போதாயனர் சொன்னது, பகவான் சொன்னது, மாடு குரங்கு, கழுகு, கினி, சொன்னது என்பவைகள் போன்ற கணக்கு வழக்குக்கடங்காத அநேகம் உண்டு.

இந்தவிதமான ஆதாரங்களைப்பார்க்கும் உரிமை விஷயத்திலோ மற்ற சமயக்காரர்களில் யாரும் அச்சமய ஆதாரம் எதையும் சேட்சை பார்த்து—படிக்க—மனதில் இருத்த—உரிமையுண்டு. ஆனால் இந்து சமயக்காரருக்கோ அச்சமய ஆதாரத்தை நூற்றுக்கு மூன்று பேர் அதிலும் பெண்களை நீக்கிவிட்டால் 100க்கு ஒன்றரைப் பேர் மாத்திரமே படிக்க கேட்கப் பார்க்க உரிமையுடையவர்களாவார்கள். பாக்கி தொண்ணூற்தெட்டரைப பேர்கள் அவைகளைப் பார்த்தோ கேட்டோ படித்தோ விட்டால் காதில் ஈயத்தை காய்ச்சிஊற்றுவதும் கண்ணைக் குத்துவதும் நாக்கை அருப்பதும் முதலாகிய பலவகை தண்டனைகள் படிப்படியாயுண்டு.

இப்படியிருக்க இதுபோலவேஇன்னும் அநேக விஷயங்களில்இந்துமதம் வித்தியாசத்தை வைத்துக்கொண்டுஅவைகளை நிலை நிறுத்த முயற்சிகளும் செய்து கொண்டு இதன் பயனாகவே தேசத்தை அன்னியநாட்டு ஆதிக்கத்திற்கும் நன்மைக்கும் விட்டுக்கொண்டு தேசத்தில் உள்ள மக்களை நாயினுங்கடையாககேவலமாய்நடத்தி இழிமக்களாக்கி அடிமைப்படுத்திக் கொண்டிருப்பதை மறந்து அநேகரை உப்புக்கு சிறைக்குப் போகச்சொல்லுகின்றது.

எனவே பிரசமயத்திற்கும் நம் (இந்து) சமயத்திற்குமுள்ள தாரதம்மியத்தையும் அதனால் ஏற்பட்ட பலனையும் எனக்குத் தோன்றிய வகையில் ஒருவாறுவிளக்கிச்சொன்னேன். இனி உங்களுக்குப்பட்டபடி முடிவு செய்து நடந்து கொள்ளுங்கள். யா

இந்திய சட்டசபை.

சிவில் விவாக மசோதாவின் கதி.

ஜனநாயகத்தின் யோக்கியதை

சிவில் விவாக மசோதா.

சர். ஹரிசிங்கோர் விவாக மசோதாவை சபையின் ஆலோசனைக்குப் பிரேரணை செய்து கூறியதாவது:—

"ஒரு வகுப்பைச் சேர்ந்தவர் மற்றொரு வகுப்பினரை விவாகஞ் செய்து கொள்வது இந்நாளில் வழக்கத்தையே ஒட்டி நிற்கிறது. அத்தகைய விவாகத்திற்கு சர்வ தேச அந்தஸ்து கிடையாது. வேறு நாடு எதும் இந்தியர்களுக்கு விவாகங்களை ரிஜிஸ்டிரார் செய்யாதது தடையாகவிருக்கிறது. விவாகத்தை ரிஜிஸ்டிரார் செய்ய சட்ட மொன்றைப் பிறப்பிக்க வேண்டுவது நாகரிகம் வாய்ந்த ஒவ்வொரு சர்க்காரின் கடமையாகும். சர்க்கார் அங்கீகாரம் பெற்றிருப்பதால் உலகத்தில் சிவில் விவாகமே சிறந்த விவாகமாகும்: தற்போது அமுலிலிருக்கும் சட்டப்படி முஸ்லிம்கள் யூதர்களிடமும், கிறிஸ்துவர்களிடமும் கொள்வினை கொடுப்பினை வைத்துக்கொள்ள முடியாது. ஆனல் குர்ஆன் அத்தகைய விவாகத்திற்கு அனுமதியளிக்கிறது. எனது மசோதா நிறைவேறுமானல், அத்தகைய விவாகங்கள் சட்ட அங்கீகாரதைப் பெறும் இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் கலப்பு விவாகம் அவசியமென்பது எனது விருப்பம்."

ஸ்ரீ. லாகரி சவுத்திரி:—நீர் ஓர் இந்துவா?

"அவர் இந்துவுமல்ல; முஸ்லிமும் அல்ல" என்று பலர் கூறினர். அதனல் சிறிப்பு ஏற்பட்டது.

எம்மதத்திற்கும் பாதகம் விளைவிக்காமல் அம் மசோதா இந்திய மக்களை ஐக்கியப்படுத்த எதுவரையும் எதையும் நம்பும்படியோ, ஒப்புக்கொள்ளும்படியோ சட்டாயப்படுத்தவில்லை. இனி மற்ற சமயங்களும் சைவசமயமும் என்பதைப் பற்றியின்னல்எழுதுகின்றேன். அல்லதுவேறுயாராவது இதே முறையில்எழுதினலும் எனக்கு மிகவும் சௌகரியமேயாகும்.

யிருக்குமென்று சர். ஹரிசிங் கோர் கடைசியாக வற்புறுத்திக் கூறினர்.

ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியார், அம்மசோதாவை ஆலோசனைக்கு விடுவதை எதிர்த்துப்பேசுகையில், தம் முன்னோர்களின் விவாக அந்தஸ்தில் வாழ தமக்கு திருப்தி உண்டென்றும் தமது குழந்தைகளும் தொன்று தொட்டுவரும் பழக்க வழக்கங்களையே பின்பற்றவரென்று நம்புவதாகவும் அறிவித்தார்.

ஸ்ரீ கபிருதீன் அஹமத்;—அப்படியிருக்கும்போது நீர் ஏன் குடியேற்றநாட்டந்தஸ்தை விரும்புகின்றீர்? (சிரிப்பு)

ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் மேலும் கூறியதாவது:— "இம்மசோதா இந்து முஸ்லிம் சமூகத்திற்கே பங்கம் விளைவிக்கும். அதனல் விவாகம் மதத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல வென்பது ஏற்படும். சமூகத்தோர் ஏகோபித்து மாறுதலை விரும்பினல்தான் சட்டத்தை மாற்ற வேண்டும். தற்போதுள்ள சட்டத்தை மாற்ற வேண்டுமென்று எவரும் விரும்பவில்லை. அம்மசோதா தேசத்தில் கலவாத்தையும் உண்டுபண்ணும். அம்மசோதாவை எக்காரணத்தைக்கொண்டும் நிறைவேற்றக்கூடாது"

சர்க்கார் எதிர்ப்பு.

சர். பி. எல்.மித்தரர் கூறியதாவது:— "நான் இம்மசோதாவைப்பகிரங்கமாக எதிர்க்கின்றேன். எந்த சமூகத்தாரின் சொந்த சட்டத்திலும் குறுக்கிடுவது சர்க்கார் நோக்கமல்ல. சமூகத்தார் சட்டத்தில் மாறுதல் வேண்டுமென்று பலமாக வற்புறுத்துவார்களேயானல் சர்க்கார் அச்சட்டத்தைத் திருத்த முற்படுவர். அம்மசோதா முஸ்லிம்களையும், கிறிஸ்துவர்களையும் யூதர்களையும் பார்சிகளையும் பாதிக்கும். கிறிஸ்துவர்களுக்கு இத்தகைய மசோதாவிற்கே அவசியமில்லை. மற்ற வகுப்பினர் இம்மசோதாவை எதிர்க்கின்றனர். இம்மசோதாவால்முஸ்லீம்கள் தங்கள் உரிமைகள் பல வற்றை இழக்க நேரிடும். விவாக உரிமை, விவாக ரத்து, ஜீதனம், போஷக உரிமை, வாரிசு இவை சம்பந்தமாக முஸ்லிம்களுக்குள்ள உரிமைகளை இம்மசோதா பாதிக்கிறது. எதிர்கால அரசியல் திட்டத்தில் தங்கள் உரிமைகளைப்பாதுகாக்கக் கவலைகொண்டுள்ள முஸ்லீமகளுக்கு இம்மசோதாவை வற்புறுத்துவது மிக்க அறிவீனமாகும். தேசத்தில் ஏகதார விவாகத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதே மசோதாவின் நோக்கமென்று டாக்டர் கோர் கூறுகின்றார். இதர விவாகங்கள் கட்ட விரோதமானவையென்பதற்கு இம்மசோதாவில் விதிவிலக்கு யாகையாலும், அத்தகைய விவாகங்கள் செய்து கொள்வோருக்கு தண்டனை விதிக்க மட்டும் விதியிருப்பதாலும், ஒருதார விவாகம் அமுலுக்கு வந்து விடாது. சர்வதேச அந்தஸ்தையும் அம்மசோதாவிலுள்ள ஒரு விதி நிராகரிக்கிறது. முடிவாகக் கூறுமிடத்து இம்மசோதா புரட்சிகரமானதே. சமூகத்தின் அடிப்படைகளையே நாசப்படுத்தும். இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இரு பழைய சட்டங்களுள்ளன. அச்சட்டங்களை மாற்றக் கூடாதென்று சபையினரைக் கேட்டுக்கொள்கின்றேன்."

சட்ட மந்திரி பேசிய பிறகு, சபையார் மசோதாவை ஓட்டுக்குவிட முடிவு செய்தனர்.

டாக்டர் கோர் எதிர்ப்பைக் கண்டு ஆச்சரியமடைந்தவராய், மசோதாவை வாபீஸ் வாங்கிக் கொள்ள விரும்பினர். அங்கத்தினர்கள் "கூடாது, கூடாது" என்றே கூவி, ஓட்டுக்குவிடவேண்டுமென்று வற்புறுத்தினர். பிறகு சபையினர் அம்மசோதாவை நிராகரித்தனர்" (தமிழ்நாடு)

ஈ வெ ராமசாமி

திரு ஈ. வெ. ராமசாமி அம்பாசமுத்திரம் தாலூகா சமூகசீர்திருத்த மகாநாட்டிற்காக கல்லிடைக்குரிச்சிக்கு திரு அய்யாமுத்துடன் 6-2-31உ புறப்பட்டு செல்கின்றார்.

9உ திரும்பக்கூடும், மறுபடியும் 13உ தடுப்பதி செங்குந்தர் வாலிபசங்க ஆண்டுவிழாவுக்குச் செல்வார் அங்கு எது சுதந்திரம் என்பது பற்றி பேசுவார். 15உ சென்னை செல்லக்கூடும், மறுடியும் 21உ நெல்லிக்குப்பம் மகாநாட்டுக்கு திரு ராமசாமியும், திரு டபுள்யூ.பி.ஏ. சௌந்திர பாண்டியன் அவர்களும் செல்லுவார்கள்.

மலாய் நாடு

ஜப்பான் செல்லுகிறார்

சென்னை ஷெரிப்புப், சட்டசபை மெம்பரும் திவான்பகதூருமான திரு. அ. முருகப்ப செட்டியார் குமார் திரு. அ. மு. வெள்ளைய செட்டியாரவர்கள் ஜப்பான் செல்லுகின்றார். இவர் வழியில் சிங்கப்பூரில் சந்தித்து காளுடுகாத்தான் வைசு. ஷண்முகம் முதலியவர்கள் வரவேற்று உபசாரப்பத்திரம் வாசித்து கௌரவப்படுத்தி வழியனுப்பினர்கள்.

திருவாரூர் விஜயபுரத்தில்

"குடி அரசு"பத்திரிகையும்புஸ்தகங்களும், விஜயபுரம சாராப்புக்கடை திரு ரா. சுப்ரமணியபிள்ளை அவர்களிடமும், திருவாரூர், யெடத்தெருவு அ.வ. பால சுபபிரமணியம் செட்டியாரிடமும் விற்பனைக்குக் கிடைக்கும்.

அ. வ. பாலசுப்பிரமணியம்,
"குடி அரசு" ஏஜண்ட்
யெடத்தெருவு, திருவாரூர்.

வேண்டுகோள்.

சுயமரியாதைச்சங்க அபிமானிகள் அங்காங்கு நமது கொள்கைகளைப்பறப்ப கிளைச்சங்கங்கள் ஏற்படுத்தவேண்டுவது அவசியம் எனக்கருதப்படுவதால், இவ்விஷயமாகப் பிரசாரம் முதலிய உதவியை விரும்புவர்கள், தயவு செய்து கிழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

சி. எ. அய்யாமுத்து.
சுயமரியாதைச் சங்கம், C/o குடி அரசு, ஈரோடு.

குடி அரசு

ஈரோடு 1931வது பிப்ரவரிமீ 8

ஜனநாயகம்.

—:0:—

சின்னஞ் சிறுவயது பிண்ணப்பட்டு சீரழிந்து கிடக்கும் ஒரு நாடோ சமூகமோ முன்னேற்றமடைய வேண்டுமானால், கண்டிப்பாய் அந்த நாட்டிற்கு ஜனநாயகம் என்பது அதாவது அந்த ஜனங்களாலேயே அந்த சமூகத்தை ஆட்சி செய்து, முற்போக்கடையச் செய்வது என்பதுமுடியவே முடியாது. இன்னும் விளக்கமாய்ச் சொல்வதானால், அதாவது, பல மதமாய், பல ஜாதியாய், பல வகுப்பாய், பல லக்ஷியமாய் பிரிந்துசாராரி 100க்கு 10 பேருக்கு கூட கல்வியறிவில்லாமல் இருக்கும் இந்தியாவுக்கு, இன்ற ஜனநாயக ஆட்சி என்பது சிறிதும் பயன்படாத என்பதேயாகும்.

இந்த அபிப்பிராயம், நாம்மாத்திரம் சொல்வதாக மக்கள் கருதினாலும் நமக்கு ஆக்ஷேபணையில்லை. ஆனாலும் அறிஞர்களும், அனுபவசாலிகளுமான அநேகர் இதே அபிப்பிராயம் கொண்டிருப்பதை நாம் கேட்டுமிருக்கின்றோம்.

அன்றியும் இந்த நமது மேல் கண்ட அபிப்பிராயத்தை நிரூபிக்க இதற்குமுன் பலஉதாரங்களை நாம் எடுத்துக்காட்டியும் இருக்கின்றோம். ஆனாலும், இப்போது கிடைத்த இரண்டொன்றையும் எடுத்துக்காட்டுவோம். அதாவது:—

இந்திய நாட்டிலுள்ள மனித சமூகத்தில் சுமார் 6 கோடி மக்கள் தீண்டாதவர்களாக--மனிதர்களால் தொடக்கூடாதவர்களாக-அநேக விஷயங்களில் மனித உரிமைகளை அனுபவிக்கக்கூடாதவர்களாக—தெருவில் நடக்கவோ, குளத்தில் தண்ணீர் அருந்தவோ பொதுக்கோயில், மடம், சத்திரம், சாவடி என்பவைகளில் பிரவேசிக்கவோ சில பொது இடங்களில் சென்று படிக்கவோ, சில பொது இடங்களில் சென்று கூலி வேலை, உத்தியோகம் முதலியவைகள் செய்யவோ தடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, கொடுமை செய்யப்பட்டவர்களாகயிருக்கின்றார்கள் என்பதில் சிறிதும் ஆக்ஷேபணையே இல்லை என்பது உலக மறிந்த விஷயமாகும். ஒரு சமயம் 6 கோடி என்கின்ற எண்ணிக்கையில் சிறிது வித்தியாசமிருப்பதாகயாராவது சொல்லியிருக்கலாமே அல்லாமல், இந்தமாதிரி கொடுமைப்படுத்தப்பட்ட மனித சமூகம் இந்தியாவில், இந்துக்கள்என்பவர்களுக்குள் இல்லையென்று யாரும் சொன்னதேயில்லை.

ஆகவே, சற்றேறக் குறைய இந்துக்கள் என்பவர்களில் 3-ல் 1-பங்கு ஜனங்கள், இந்த நிலையில் வெகுகாலமாய் இருந்து வருகின்றதையறிந்தும், இவர்களுக்கு எவ்வித விடுதலையும் இல்லாமலேயே இப்படிச்செய்யப்பட்ட கூட்டத்தாராலேயே, இந்தியாவுக்கு ஜனநாயக ஆட்சி கேட்டுக் கொண்டு வரப்படுகின்றது.

ஜனநாயக ஆட்சி''வழியில்''சுமார் 20, 30 வருஷகாலமாக நடக்க சந்தர்ப்பம் கிடைத்து மிக்க கெருக்கமான வழி என்பதிலாவது நடந்து வந்தும், இன்று வரை இந்தமாதிரி ஜனநாயக தத்துவம், இந்த 6 கோடி மக்கள் கொண்ட சமூகத்திற்கு ஒரு காரியமும் செய்ய முன்வரவேயில்லை. வேறு யாராவது அவர்களுக்கு ஏதாவது செய்வதாயிருந்தாலும் எந்தக்காரியத்திற்கும் இவர்கள் சம்மதிப்பதும் இல்லை. இவர்களை மீறி ஏதாவது சிறிது நடந்தாலும், நடப்பதாயிருந்தாலும் அது இந்திய ஜனநாயகத்தின் தத்துவத்தின் பலனுமில்லாமல், பிரிட்டிஷ் தனி நாயகத்தின் தயவால் என்றே சொல்லும்படியாகவே நடந்து வந்திருக்கின்றன-- வந்துகொண்டேயிருக்கின்றன.

மற்றும், இந்தமாதிரி தாழ்த்தப்பட்டு கொடுமை செய்யப்பட்ட 6 கோடி சமூகமானது இன்றையத்தினம் எங்காவது, ஏதாவதுஒருவித சௌகரியத்தை வழக்கத்திற்கு விரோதமாய் அனுபவிக்கிறார்கள் என்று சொல்லப்படுமானால், அது ஜனநாயகத் தடையையும் பலத்தையும் மீறி, ஜனநாயகத்தை தனி நாயகம் தோற்கடித்து, ஆதிகம் செலுத்தியதின் பயனுப் நடக்கின்றதேயல்லாமல் வேறில்லை என்று உறுதியாய்ச் சொல்லுவோம். வெளிப்படையாய்ச் சொல்லவேண்டுமானால் பார்ப்பாருக்கோ, சைவருக்கோ, சைவ வேளாளருக்கோ மற்றும் தங்களை ''பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய சூத்திர'' என்று எண்ணிக்கொண்டிருக்கும் மேல் ஜாதிக்கோ, இந்த வெள்ளைக்கார அரசாங்கம் ''எமனே'' த்தோன்றியாயினும், மேல்கண்ட கொடுமைகளையும் கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் இந்தக் கொடுமைப்படுத்தப்பட்ட 6 கோடி மக்களுக்கு, இந்தவெள்ளைக்கார அரசாங்கம் ''சர்வதயாபரரும், காருண்ய மூர்த்திபுமான கடவுளால்'' அனுப்பப்பட்டது என்று அவர்கள் நினைத்துக்கொண்டிருப்பதில்சந்தேகமும்இல்லை, அதில் ஒரு அதிசயமும் இல்லை

அன்றியும், இன்று இனியும் கேட்கப்படும் ஜனநாயக சுதந்திரங்கள்கூடமேற்கண்ட தாழ்த்தப்பட்டு,கொடுமை செய்யப்பட்டமக்களை இனியும் தலையெடுக்கவொட்டாமல் செய்யவேண்டும் என்கின்ற ஆசையைக்கொண்டுதான் கேட்கப்படுகின்றது. என்பதை மறுக்கவோ, ஆக்ஷேபணை சொல்லவோ போதிய காரணம் கிடையாதென்றே தைரியமாய்ச் சொல்லுவோம். இன்று அவர்கள் அனுபவிக்கும் தொல்லைகளில் முக்கியமானது என்ன வென்றால்,

மற்றமக்களைப்போல்விகிதாசாரம் தாங்கள் படிக்கமுடியாதது, மற்றமக்களைப் போல் தங்கள் விகிதாசாரம் தாங்கள் சம்பாதிக்க முடியாதது, மற்ற மக்களைப் போல் தங்கள் விகிதாசாரம் அரசியல் சுதந்திரங்களை அனுபவிக்க உத்தியோக வகையரா பெற முடியாதது முதலியவைகளாகும். இந்தமூன்றும் எந்த ஜனநாயக ஆக்ஷியிலாவது, ஏதாவது ஒரு பரிகாரத்திற்கு இடம் இருக்கின்றதா? என்று பார்த்தால், பரிகாரம்கேட்பதே தேசத்துரோகமாகவும், ஜனநாயக தத்துவத்திற்குவிரோதமாகவும்பாவிக்கப்படுகின்றது. இதைப்பற்றி யாரும், எந்த ஜனநாயக வாதியும்,தேசீயவாதியும் வெட்கப்படுவது கூட கிடையாது. இந்த நிலையைப் போல ஒருமானக்கேடான காரியம் இந்த நாட்டுக்கு வேறு ஒன்றுமே கிடையாது என்று சொல்லுவோம். அரசியல் சீர்திருத்தம் அதிகமாய் வழங்குவதற்காக என்று இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட சைமன் கமிஷனை, இந்த நாட்டில் 100க்கு 99 3/4 பார்ப்பனரும் ஆக்ஷேபித்து, பகிஷ்கரிக்க வேண்டுமென்றார்கள். சில பார்ப்பனரல்லாத சோணகிரிகளும் அவர்களை பின்பற்றினார்கள். ஆனால், தாழ்த்தப்பட்டு,கொடுமைப்படுத்தப்பட்டவர்களில் எல்லோருமே சைமன் கமிஷனை வரவேற்று, ஆதரித்து தங்கள் குறைகளைச் சொல்லிக் கொண்டார்கள். பகிஷ்கரித்தவர்கள் யோக்கியதையையும், ஆதரித்தவர்கள் அடைந்த பலனையும் இப்போது கவனித்துப் பார்த்தால், பகிஷ்காரக்கூச்சல் போட்டவர்கள் தங்கள்சமூகநலனுக்கும் ஆதரித்தவர்கள் தங்கள் விடுதலைக்குமாக நடந்து கொண்டார்கள் என்பது விளக்கமாகும். சைமன் கமிஷனை ஆதரித்து,தங்கள் குறைகளைச் சொல்லிக்கொண்ட தாழ்த்தப்பட்ட வகுப்பார்களின் பிரதிநிதிகளாக லண்டனுக்குச்சென்ற திருவாளர்கள் டாக்டர் அம்பரிட்கார், ராவ் சாஹிப் சீனிவாசன் ஆகிய இருகனவான்களும் வெளியிட்டிருக்கும் ஒரு யாதாஸ்துப்படியும், ராவ் சாஹிப் சீனிவாசன் அவர்கள் லண்டனிலிருந்து தங்கள் வகுப்பாருக்கு அறிவித்திருக்கும் கம்பியில்லாத்தந்திபி லிருந்தும் நாம் அறிவது என்னவென்றால்,

அவர்கள் தங்கள்யாதாஸ்தில் கண்டிருப்பதானது:—

தங்களுக்கு இந்நாட்டின் சமத்துவ மானகரவாழ்க்கை சுதந்திரம்கிடைப்பதற்கு அடியில் கண்ட திட்டங்களை சட்டமாக ஆக்கச்செய்யப்பட வேண்டுமென்றும்,

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தங்களுடைய மற்ற குடி ஜனங்களுக்கு கொடுத்திருக்கும் உரிமைகளை, யாதொரு தடையுமில்லாமல் தங்களுக்கும்கொடுக்க வேண்டும். அவைகள் எந்த முறையில் இருக்கவேண்டுமென்றால், மற்றவர்கள் பொதுவாக எல்லாக் காரியங்களிலும் அனுபவிக்கும் சுதந்திரங்களைபோலவேஉதாரணமாக பொதுசத்திரங்கள், மடங்கள், பள்ளிக்கூடங்கள், ரோட்டுகள், குளங்கள், கிணறுகள் இதரதண்ணீர் துறைகள் முதலாகியவைகளிலும், தரையிலாவது, தண்ணீரிலாவது, ஆகாயத்திலாவது செல்லும் வாகனங்கள், நாடக சாலைகள், பொது இளைப்பாரும் இடங்கள், சந்தோஷ விளையாட்டு, களியாட்டு இடங்கள் முதலிய இடங்கள் ஆகியவைகள் எந்தமுறையில் நடத்தப்பட்டாலும், அவைகளில் சென்று,அவற்றின்பலனையும்,சௌகரியத்தையும், மற்ற குடிஜனங்கள் அனுபவிப்பது போல் தாங்களும் அனுபவிக்க தாராளமான உரிமைகள் இருக்க வேண்டும் என்றும்,

அவ்வித சுதந்திரங்களை யாராவது தடித்தால் அப்படித்தடுப்பவர்களை 5 வருஷகாலம்வரை தண்டிக்கத்தகுந்தபடி சட்டத்தில் விதிகள் இருக்க வேண்டும் என்றும்,

மேல்கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாய் நடக்கும் முறையில்,தங்களை யாராவது, எந்தக்காரியத்திலாவது பஹிஷ்காரம் செய்தால் அல்லது செய்யும்படி தூண்டினால், அப்படிப்பட்ட கூட்டத்தார்களையோ,

தனி மனிதர்களையோ, முறையே 7வருஷம், 5வருஷகாலம் வரை, தண்டிக்கவோ, அல்லததகுந்த அபராதம் விதிக்கவோ அல்லதுஇரண்டும் செய்யவோவிதிகள் செய்யவேண்டும், என்றும்,

மற்றசமூகத்தாருக்கு இருப்பது போல், மற்றவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவும், சாக்ஷிகொடுக்கவும், சொத்துக்களை வாங்கவும், விற்கவும், குத்தகைக்கு விடவும், குத்தகை வசூலிக்கவும், சொத்துக்களை சுதந்திரமாய் அனுபவிக்கவும்,

சர்க்கார் நிர்வாகம், ராணுவம் ஆகிய துறைகளிரண்டிலும் மற்ற ஜனங்களைப்போலவே, தாங்களும் உத்தியோகங்களை தாராளமாய் வகிக்கவும்,

எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் சேர்ந்து வாசிப்பதற்கும்,

தெரிந்தெடுக்கப்படும் ஸ்தாபனங்களில் தங்கள் சமூகத்தினரின் மொத்த எண்ணிக்கைக்குச் சரியான பிரதிநிதித்துவம் இருக்கவும்,

கோயில்கள், பொது மடங்கள், சத்திரங்கள் ஆகியவைகளின் சொத்துக்களை மற்றவர்கள் அனுபவிப்பது போலவே தாங்களும் அனுபவிக்கவும்,

தங்கள் உரிமைகளை காப்பாற்றிக் கொள்ளும் விஷயத்தில் மற்றவர்களுக்கு இருக்கும் சுதந்திரங்கள் சௌகரியங்கள் தங்களுக்கும் இருக்கவும்,

குற்றங்களுக்கு தண்டனைகள் விதிப்பதில் கொஞ்சமும்வித்தியாசமில்லாமல் இருக்கவும், கண்டிப்பானசட்டவிதிகள் செய்யப்படவேண்டும்.

மற்றும்,

தங்கள் சமூகஎண்ணிக்கைக்குச்சரியான பிரதிநிதித்துவம் அளிப்பதும்,

தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தெரிந்தெடுக்கவும்,

முதல் 10 வருஷத்திற்கு தனித் தேர்தல் முறை அளிக்கவும்,

பிறகு சாத்தியப்பட்டால், பொதுத் தேர்தலில் சேர்த்துக்கொள்ள வசதி செய்து கொள்ளவும்,

பொதுத்தேர்தல் முறையை தங்கள் வகுப்பார் ஆக்ஷேபித்தால் அவர்களை நிர்பந்தப்படுத்தாமல் இருக்கவும்;

உத்தியோகத்தெரிந்தெடுப்பில், தங்கள் வகுப்பில்விதாச்சாரம் தெரிந்தெடுக்கவும்,

உத்தியோகங்களில், இப்போது இதரஜாதிகள்எத்தனை விகிதாச்சாரம் இருக்கின்றார்களோ, அத்தனை பேர்கள் விதாச்சாரம் வீதம், தங்கள்சமூகத்தாரும் உடனே வந்து சேர்ந்து உத்தியோகம் அடைவதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டியதும்,

இந்தக்காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டசட்டங்களை, எந்தமாகாண மாவது சரியானபடி அமுலில் கொண்டுவரவில்லையானால், கவர்னர் ஜனரல் சபையிடம் அப்பீல் செய்துகொள்ள உரிமையிருக்கவும், அப்படிப்பட்ட அப்பீலின் மீது, கவர்னர் ஜனரல் உடனே பிரவேசித்து மேல்படி சட்டத்தை சரியானபடிநடத்திவைக்கப்பாதுகாப்புகளும் இருக்கவேண்டும்.

கடைசியாக, இந்தசீர்திருத்தங்கள் வழங்கப்பட்டு, இது அமுலுக்குவரும் போது, இதற்காக அதாவது இவை ஒழுங்காக நடைபெற இதற்கென்றே ஒரு தனி இலாகா ஏற்படுத்தி, அதற்காக ஒரு தனி மந்திரியையும் ஏற்பாடு செய்யவேண்டும். அவர் மத்திய சபையின் நம்பிக்கைக்கு பாத்திரமாகவும் இருக்கவேண்டியதோடு பாரபக்ஷமில்லாமல் நடந்துகொள்ளக்கூடிய சுதந்திரமும், தன்மையுமுடையவராகவும் இருக்கவேண்டும்.

மாகாண நிர்வாகசபைகளிலும், மத்திய அரசாங்க நிர்வாக சபையிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்த ஒருவர் ஸ்தானம் பெறத்தக்கமுயற்சியும், ஏற்பாடும் செய்ய கவர்னருக்கும் கவர்னர் ஜனரலுக்கும் சட்டப்பூர்வமான வசதிகள் இருக்கவேண்டும்,

என்பவைகளாகும்.

இந்தப்படியான ஒரு யாதாஸ்தை வட்டமேஜையில் ஆஜர் செய்திருக்கின்றார்கள்.

நிற்க, மேற்கண்ட இந்த யாதாஸ்துக்கு அதாவது இந்தப்படியான சீர்திருத்தம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு வட்டமேஜையாரும் ஒப்புக்கொண்டிருப்பதாக திரு. ராவ்சாகிப் சீனிவாசன் அவர்கள் தனது சமூகத்தாருக்குக் கொடுத்த ஒரு தந்தியால் தெரிய வருகின்றது. அந்தத்தந்தியின் சாரமாவது:—

1. தனித்தொகுதி மூலம் தேர்தல் நடத்துவது,

2. தங்கள் சமூகத்தில் வயது வந்தவர்களுக்கு எல்லாம் ஓட்டு உரிமை அளிப்பது,

3 மாகாண சட்ட சபைகளில் எப்படியும் 100க்கு 15 வீதம் ஸ்தானங்களுக்கு குறைவில்லாமல் இருப்பது,

4. மந்திரி சபையில் தாழ்ந்த வகுப்பாருக்கு ஒரு ஸ்தானம் இருப்பது,

5. எல்லா உத்தியோகங்களிலும் விகிதாச்சாரம் தங்கள் சமூகத்துக்கு உத்தியோகம் வழங்குவது,

ஆகிய இவைகளுக்கு விதாயங்கள் ஏற்பட்டு விட்டதாக தெரிகின்றது.

ஆகவே இந்த சௌகரியங்கள் அவர்களுக்கு கிடைப்பதற்கு இன்று ஜனநாயகம் உதவி செய்ததா? தனி நாயகம் உதவி செய்ததா? என்று பார்த்தால் தனி நாயகத்தின் பெருமை விளங்காமல் போகாது.

மற்றொரு உதாரணம்

நிற்க, ஜனநாயகத்தின் யோக்கியதைக்கு மற்றொரு உதாரணம் சொல்லுவோம். அதாவது, சமீபத்தில் ஒரு வருஷத்திற்கு முன் இந்திய சட்டசபையில் நிறைவேறின பாலிய விவாகத்தடுப்புச் சட்டமானது ஜனநாயகத்தால் நிறைவேற்றப்படமுடியாமல், தனி நாயகத்துவத்தின் உதவியாலேயே நிறைவேற்றப்பட்டது. அது அமுலில் வருவதில் ஜனங்கள்-ஜனப் பிரதிநிதிகள் ஆக்ஷேபிக்கிறார்கள் என்று இன்றும்சொல்லப்படுகின்றது இந்தச் சொல்லுக்குப் பயந்து, ஜனநாயகத்துக்கு சார்பளிக்கும் அரசாங்கம், தனி நாயகம் செய்யாமல் பயப்படவும் செய்கின்றது.

அன்றியும் அந்தச்சட்டத்தை ஒழிக்கவும், மீறவுமே ஜன சுபாவம் முந்திக்கொண்டு இருக்கின்றது. இந்தப்படி செய்வதற்காகச் சொல்லப்படும் காரணம் என்ன வென்று பார்த்தால் அது பகுத்தறிவையோ, அனுபவபலனையோ, மனிதவர்க்கத்துவ சாஸ்திரத்தையோ ஆதாரமாய்ச்சொல்லாமல் "ஒரு காலத்தில் இருந்த ஒருவர் சொன்னார்" "அந்தப்படி நடக்காவிட்டால் மதத்துக்கு விரோதம்" "பாவமானதாகும்" "நரகம் வரும் என்று வேதம் சொல்லுகிறது" என்ற காரணங்களால் ஆக்ஷேபிக்கப்படுகின்றன. இருக்கின்ற அல்லது வரப்போகின்ற அல்லது இன்றும் அதிகமாக வரவேண்டிய ஜனநாயக ஆக்ஷி திட்டம் என்பதிலும், இந்தப்படியான அதாவது எதோ ஒரு காலத்தில், யாரோ ஒரு பெயர் உடையவரால், யாருக்காகவோ சொல்லப்பட்டதாக, ஏற்பாடு செய்திருக்கும்—எழுதிவைத்திருக்கும் மதத்துக்கும், வேதத்திற்கும் விரோதம் எந்தக்காரணத்தைக்கொண்டும் ஏற்படுவதற்கு மார்க்கமில்லாமல் வெகு ஜாக்கிறதையாய்ப் பார்த்து திட்டம் வகுக்கப்படவேண்டுமென்றே சொல்லப்படுகின்றது.

ஆகவே இந்த ஜனநாயகம் மனிதவர்க்கத்திற்கு நியாயமான சுதந்திரத்தையும், சுவாதீனத்தையும் கொடுக்கக்கூடியதா அல்லது அடிமைத்தனத்தையும், கெடுதியையும் கொடுக்கக்கூடியதா என்பதை யோசித்தாலும், ஜனநாயகத்தின் யோக்கியதை சுலபத்தில் விளங்காமல் போகாது. நமது மக்களின் ஜனநாயக உணர்ச்சியானது இன்று "நமது தேசம்" "நமது மதம்" "நமது ஜாதி" என்கின்ற தத்துவத்தின் மீதும் "முதலில் தேசம்" என்று பலரும் "முதலில் மதம்" என்று சிலரும் "முதலில் ஜாதி" என்று அநேகரும் கருதியே ஜனநாயக திட்டம் வகுப்பதில் முனைந்திருக்கின்றார்களே யொழிய, முதலில் மனித சமூகம் பிறகுதான்மற்றது, என்கின்ற அறிவு இந்தநாட்டில், இன்றையதினம், மகாத்மாக்கள் முதல் தேசிய வீரர்கள்—தொண்டர்கள் வரை, தேசாபிமானி முதல் தேசபக்தர்—தேசியவாதிகள் வரை, ஆச்சாரியர், மடாதிபதி, சுவாமிகள் முதல் அடியார் கூட்டங்கள் வரை, ஆஸ்திக பண்டிதர்கள் முதல் அவர்களது மாணவர்கள் வரை யாராவது ஒருவருக்கு இருக்கின்றதா? என்பதைகடுநிலைமையிலிருந்துயோசித்துப்பார்த்தால் ஜனநாயகத் தத்துவத்தின் யோக்கியதை விளங்காமல் போகாது.

ஜனநாயகம் என்பதில், ஜனம் என்றால் மனிதர்கள் என்றும், நாயகம் என்றால் ஆட்சித்வம்—ஏகமானத்துவம் என்றும் பொருளாகும்.

ஆகவே மனித ஆட்சித்துவம் என்பது மனித தர்மத்துக்கும், மனிதத்துவத்திற்கும் பொதுவான நன்மை பயக்கும்படியானதாகவும், காப்பு அளிக்கும்படியானதாகவும் இருக்கவேண்டியதா? அல்லது "என தேசம் காப்பாற்றப்பட்டபின்தான் மனித தர்மம், என் மதம் காப்பாற்றப்பட்டபின் தான் மனித தர்மம், எனக்கு மோட்சத்தில் சரியான இடம் தேடிக்கொண்ட பின் தான் மனிததர்மம், எனக்கு நரகம் கிடைக்காமல் பார்த்துக் கொண்ட பின்தான் மனித தர்மம்" என்று பாதுகாப்பு ஏற்படுத்திக்கொண்டு மனித பொது தர்மத்தையே கவலையற்றதாகக் கொண்டால் அந்த ஜனநாயகம் மனிதவர்க்க ஆட்சி ஆகுமா? அல்லது மத நாயகம், அல்லது தனிப்பட்ட மனிதனின் மோட்ச நாயக ஆட்சியாகுமா என்று பார்த்தாலும், ஜனநாயக ஆட்சியின் போலித் தத்துவம் விளங்காமல் போகாது. எனெனில், தேச நாயக ஆட்சியும், மத நாயக ஆட்சியும் மோட்ச நாயக ஆட்சியும், மற்றப் பொதுக்காரியங்களும் ஒவ்வொரு நாட்டுக்கு ஒவ்வொரு விதமாகவும், ஒவ்வொரு மதத்திற்கு ஒவ்வொரு விதமாகவும், ஒவ்வொருசமூகத்திற்கும் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஒவ்வொரு விதமாகவும், ஒவ்வொரு தனி மனிதனின் ஒவ்வொரு நிலைமைக்கும் ஒவ்வொருவிதமாகவும் இருந்துவருகின்றது. மேலும் இவைகளுக்கெல்லாம் பூரண சுதந்திரமும், பாதுகாப்பும் அளிப்பதுதான் ஜனநாயக தத்துவம் என்பதாக மகாத்மாக்களால், பூரண சுயேச்சை வீரர்களால் தேசிய வாதிகளால் உறுதிவாக்களிக்கப்பட்டாய் விட்டது. ஆகவே,

இந்த ஜனநாயகம் மனித சமூகத்திற்கு ஆபத்தானதா அல்லது அனுகூலமானதா என்பது அறிவாளிகளுக்கு விளங்காமல் போகாது.

மக்களுக்கு உண்மையான மனித தர்ம நாயகம் எப்படியிருக்கவேண்டுமென்பதற்கு ஒரு உதாரணம் வேண்டுமானால் நடுச் சமுத்திரத்தின் முழுகப்போகும் கப்பலின் நடவடிக்கையைப்பார்த்தால் தெரியவரும். அதாவது, கப்பல் முழுகும்போது கப்பல் ஓட்டும் கலீவன் ஜனங்களைக் காப்பாற்ற முயற்சிக்கும் முறையில் மனித தர்மம் விளங்குவதைக் காணலாம்.

அதாவது கப்பல் முழுக ஆரம்பித்தவுடன், தேசம், மதம், ஜாதி, உத்தியோகம், பணம், பதவி ஆகியவைகளை கவனிக்காமல் பலக்குறைவானவர்களையும் சகதிக்குறைவானவர்களையும் காப்பாற்றுவதே முதல் கடமையாய் நினைத்து பெண்களையும், வயோதிகர்களையும், குழந்தைகளையும, நோயாளிகளையும், முதலில் காப்பாற்றுகின்றான். ஆகவே ஆட்சியிலும் அப்படிப்பட்ட கொள்கையே மனித தர்ம நாயக ஆட்சியாகும். இந்த ஆட்சியை ஜனநாயக ஆட்சி கடபலிருக்கும் எல்லா ஜனங்களுக்கும் சுதந்திரம் கொடுத்தால் முதலில் எடுத்துக்காட்டிய ஜனநாயகக்கொள்கை ஆதிக்கமானது ஒவ்வொருவனி மனிதனும்தான் முதலில் காபபாற்றபபட வேண்டும் என்று ஆசைபபட்டு உலகம ஏறபடடு அதனால் கையேரும் சாதனங்கம் கூடஎலலாம அடியோடுமுழுகிபோகும. இநத மாதிரிதான் நமது ஜனநாயகமும் இருக்கின்றது.

மற்றொரு உதாரணம்

அதாவது ஜனநாயக ஆகுமி மனித தர்மத்திறகு எவ்வளவு ஆபத்துகரமானது என்பதறகு மறறொரு உதாரணம் என்னவெனறால "இவ்வாரம் இந்திய சட்டசபையி சர் ஹரிசிங் கவரால் கொண்டுவரப்பட்ட விவாக சீர்திருத்த சட்டமானது ஒரே அடியாய தலையில் அடித்து சொல்லப்படடுவிட்டது.

இந்த சட்டமானதுவெருகால மாக ஆனேக அறிவாளிகள என்பவர்களால் ஆலோசித்துசம்மதிக்கப்பட்டு கொணடுவரப்பட்டதாகும்.

அச்சட்டமானது பூரணமுற் போக்கடைந்தது என்றேமனித தர்மத்திறகோ, மனித சுபாவத்திறகோ, மனித சுதந்திரத்திற்கும முழுஉரிமை அளிக்ககூடிய தென்றே சொல்லிவிட முடியாததாயிருந்துங்கூட, அதாவது ஒரு மனிஷிக்குமேல் விவாகம் செய்துகொள்ளக்கூடாது என்கின்ற தடையை வைத்தும் அது ஜனநாயகத்துவ பிரதிநிதிசபையாலும் ஜனநாயகதத்துவ ஆசாங்கத்தின் ஜனப்பிரதிநிதி அங்கத்தினராலும் (நானபிஷியல் லா மெம்பராலும்) விரட்டி அடிக்கப்பட்டுவிட்டது. இதற்கு சொல்லப்பட்ட காரணம் என்னவென்று பார்த்தால் திரு ராஜாபகதூர் கிருஷ்ணமாச்சாரியார் என்ற ஒரு அய்யங்கார் பார்ப்பனர் "எனது மூதாதைகள் செய்த ஏற்பாட்டுபடிதான் இருக்கவேண்டும் அதற்கு விரோதமானவைகளை ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது. ஆதலால் இந்தச்சட்டம் கூடாது" என்பதாகச் சொல்லி, சட்டத்தை எதிர்த்திருக்கின்றார். மற்றவர்களும் இதை அனுசரித்தே மதக்கட்டளையை முன்னிட்டே எதிர்த்திருக்கின்றார்கள். கடைசியாக சர்க்கார் தரப்பில் சட்டமெம்பர் என்கின்ற ஒருபார்பபனர் தனதுபார்ப்பனப் புத்தியை யேகாட்டி சர்க்காருக்கும் தனது சமூக ஆதிக்கத்திற்கும் இந்தகமில்லாமல் பேசி அதை நிராகரிக்கச் செய்துவிட்டார்.

அந்தச்சட்டத்தின் சாரமெலலாம் தனக்கு இஷ்டமான பெண்ணை, அதுவும் ஒரேஒரு பெண்ணைமணந்துகொண்டு வாழ்வதை எந்தசட்டமும் தடுக்கக்கூடாதுஎன்பதேயாகும் (அதாவது கலபபு மணததிற்கு அனுமதியளிப்பது) இதனால் மதம, பெரியோர் செப்த ஏற்பாடு ஆகியவைகள் கெடக்கூடாது என்கின்ற காரணங்களே, மனிதவுரிமைக்குத் தடையாய் இருக்கின்றது என்று ஏற்படுகின்றதே அல்லாமல் அதுமனிததர்மத்திற்கோ, சீர சௌககியத்திற்கோ நாணயத்திற்கோ ஒழுக்கத்திற்கோ என்ன தடை அல்லது கெடுதி ஏற்படுகின்றது என்பது கவனிக்கப்படவிலலை என்கின்றது நன்றாய் விளங்குகின்றது.

ஈரோடு சுயமரியாதை மகாநாட்டில் தலைமை வகித்த திரு ஜயகர் அவர்கள், கலப்பு மணத்தைபபற்றிப பேசும்போதுதான் கலப்பு மணத்தைப்பற்றி வெளிலக்கார அதிகாரிகளுடன் பேசியதாகவும், அதற்கவர்கள் "கலப்புமண சட்டத்தைப் பாசுசெய்து(நிறைவேற்ற)எங்களை இந்த நாட்டைவிட்டு விரட்டப் பார்க்கிறீர்களா என்று கேட்டார்கள்" என்பதாக எடுத்துச் சொன்னர். ஆகவே, கலப்பு மணம், அனுபவத்தில் நமது நாட்டில் நடைபெறுமானால், நமது நாட்டில் ஐரோப்பியர் ஆகியோ, கிறிஸ்துவர் ஆகியோ, மகமதிய ஆகியோ, இந்துக்கள் ஆகியோ மற்றபடி பௌத்தம், கிறிஸ்து, இஸ்லாம், இந்து முதலிய மதங்களோ, பார்ப்பான், பறையன் முதலிய ஜாதிகளோ, அன்னிய ஆகுமிகளோ அடியோடு நமது நாட்டைவிட்டு.என் உலகத்தையேவிட்டுக்கூட ஓடிப்போகமார்க்கமுண்டாகும். இந்த நிலை கூடாது என்கின்றவர்களுடைய ஆகுமிதான், இன்று ஜனநாயக ஆகுமியாகவும், இனியும் அதிகமான முற்போக்குள்ள ஜனநாயக ஆகுமியாகவும் இருக்கின்றது, இருக்கவும் போகின்றது.

ஆகவே, லெனின் ஆகுமியோ, கமால்பாகூ ஆகுமியோதான் மனிதத் தர்ம—மனித நாயக, ஆகுமியாக இருக்க முடியுமேயல்லாமல் மற்றபடி எந்த சீர்திருத்தம் கொடுத்து, எந்த ஜனநாயக ஆகுமி கொடுத்து, அதை எந்த மகாத்மா ஒப்புக்கொண்டு, அதை எந்த வெள்ளைப் பார்பபானே, கருப்புப் பார்ப்பானே, மொடடைப்பார்ப்பானே மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டு நடத்திக் கொடுபபதாயிருந்தாலும் அது ஒரு நாளும் மனித தர்ம ஆட்சியாகயிருக்க முடியவேமுடியாது என்று உறுதியாய்ச் சொல்லுவோம்.

மேலும மனிதனுக்கு ஒரு நாயகம் வேண்டி இருந்ததின் காரணமே மனிதசமூகம நாயகமில்லாமல் வாழ்க்கை நடத்தமுடியாமல் போனதினாலேயேயாகும். அந்தப்படி முடியாமல் போனதற்கு காரணம், மனிதனுக்கு அறிவிலலாத தனமையும சுயநலத்தடிப்புமாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் மேலகண்ட இரண்டும் மக்களுடன் மக்கள் கலந்து ஒற்றுமையாயும் நம்பக்கையராயும் வாழச்செய்ய முடியாது.

ஆகவே மக்கள் தங்களுக்கு ஒரு அரசன் வேண்டியது என்பதற்கு ஆதாரமான காரணங்கள் எல்லாம் ஒழிக்கப்பட்டு அரசன் இலலாமல வாழலாம் என்கின்ற தன்மை அடையும்வரை தங்கள் பொது வாழ்வில் தங்களுககு தாங்களே நாயகர்களாயிருந்து கொள்வது என்பது சாத்தியமான காரியமாகுமா என்பதை கவனித்துபபார்தாலும் ஜனநாயகத்தின் முடடாள் தனம விளங்காமல் போகாது. அந்தக் காரணங்கள் சரிபபடுத்தப் படாத ஜனங்கள் மறுபடியும் தங்களைத் தாங்களே தங்கள் பொதுவாழ்வுக்கு நாயகர்களாய் இருந்து கொள்ளுவது என்பது சாத்தியமான காரியமாகுமா? என்பதை கவனித்துப்பார்த்தால் ஜனநாயகத்தின் முட்டாள்தனம் விளங்காமல் போகாது.

ஆகவே இப்போது ஜனநாயக ஆகுமி என்று நாம் சொல்லுவதெல்லாம் ஒருக்காலும் மனித தர்ம ஆகுமியாகவேஆகாது.

முதலில் நான் மனிதன்
பிறகுதான்
இந்தியனே, எவனே, ஆவேன்.

ஈரோட்டில்
C. S. R.
பாராட்டு விழா.

கோவை திவான்பகதூர் சி எஸ். இரத்தினசபாபதி முதலியாருக்கு திவான்பகதூர் பட்டம் கிடைத்ததுபற்றி ஈரோடு மகாஜனங்கள் கொண்டாடின பாராட்டு விழாவைப்பற்றிய விபரம் அடுத்தவாரம் வரும்.

திருமதி கே. சந்தானம்.

திருச்சங்கோடு காந்தி ஆச்சரமத்தின் மானேஜரும், இப்போது வேலூர் சிறையிலிருப்பவருமான திரு. கே. சந்தானம் அவர்களின் மனைவி திருமதி சுந்தராம்பாள் அவர்கள் கிணற்றில் ஸ்நானம் செய்கையில் அகஸ்மாத்தாகக் கால் தவறிகிணற்றில் விழுந்து, இறந்த செய்தி கேட்டு நாம் வருந்துகின்றோம். அன்னாரின் குடும்பத்தாருக்கு நமது அனுதாபத்தைத்தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சுயமரியாதை சங்க நிர்வாக கமிட்டி கூட்டம்.

——:0:——

ஈரோடு திரு ஈ. வெ. இராமசாமி அவர்கள் வீட்டில் பிப்ரவரி மீ 2, 3, உ திகள் செவ்வாய் கிழமைகளில் கூடிற்று. சங்கநிர்வாகசபை அங்கத்தினர்கள் திருவாளர்கள், தலைவர் டபில்யூ. பி. எ. சௌந்திரபாண்டியன், எம். எல்.சி., ஈ. வெ. ராமசாமி, காரியதரிசி எஸ். ராமநாதன், திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி எம். எல். சி. கோவை, வி.வி. ராமசாமி விருதுநகர், ஜே. எஸ். கண்ணபபர் சென்னை, ஷேக் தாவுதுசாயப்சேர்மன் ஈரோடு, கி. அ. பெ. விஸ்வநாதன் திருச்சி, ஆகியவர்கள் வந்திருந்தார்கள்.

மற்றும் வெளியூர்களில் இரு

ந்து வந்து நடவடிக்கைகளில் கல ந்து இருந்தவர்கள். திருவாளர் கள் ஐயாமுத்து, கே. வி. அழ கர்சாமி, எஸ். வி. லிங்கம், எஸ். இராமசாமி (துறையூர்) வாசு (திருச்சி), ஏ. ஆர். சிவானந்தம் (கோவை), முத்துநாடார் (அரு ப்புக்கோட்டை) சொக்கலிங்க பாண்டியர் (அருப்புக்கோட்டை) எஸ். மாசிலாமணி (திருச்சி,) ஏ. எஸ். ஆனந்தம் (மதுரை) உ. கந்தசாமி (தூ. நா. பாளையம்) எஸ். சி. ஆர். பிள்ளை (சேலம்) எஸ். ஆர். பெருமாள் (சேலம்) எம். வி. சடையன் (சேலம்) ரங்கராஜு ஜில்லாபோர்டு மெம் பர், சீனிவாச செட்டியார் கன் ராக்டர், சிக்கைய நாயக்கர் கவு ன்சிலர் சா. ராமசாமி நாயக்கர் ந. ராமசாமி, செலமேலு.

சி. கு. சிவலிங்கம் செட்டியார் [ஜலகண்டபுரம்] ச. ப. அத்த ஞரி [ஜலகண்டபுரம்] அ. ப. ந. அர்த்தநாரி செட்டியார் ஜலகண் டபுரம்ஆர், ரங்கசாமி [நகர்] எஸ். ஆரோக்கியசாமி [நகர்] ஆர். வையாபுரி செட்டியார் [குளித் தலை] ஆர். குழந்தை [குளித்தலை] சி. பி. சுப்பையா [கோவை] கை வல்யம் [தூ.நா.பாளையம்] தி. அ. வெங்கடசாமி [அழகிய நல்லூர்] வெங்கடாஜலம், முதலியோர்க ளாவார்கள்.

காரியக் கமிட்டிக் கூட்டத்தி ற்கு வரமுடியாமைக் குறித்து சுமார் 20 கடிதங்கள் வரை வந்தது.

நிறைவேறிய தீர்மானங்கள்.

1. 3வது சுயமரியாதை மகா நாட்டை விருதுநகரில் 1931ஹு ஏப்ரல் மாதம் 25, 26, 27 தேதி களில் நடத்துவதென்று தீர்மா னிக்கப்பட்டது.

2: மகாநாட்டுக்கு சர் ஹரி சிங்கோர் டாக்டர் அம்பட்கார் ஆகிய இவர்கள் பெயரை மகா நாட்டு வரவேற்புக் கமிட்டிக்கு சிபார்சு செய்து, இதைப் பற் றி முடிவு செய்யவும், மற்றகடி தப்போக்கு வாத்துகள் அழைப் புக்கடிதங்கள் முதலியவைகள் செய்ய தலைவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

3. பெண்கள் மகாநாடு, இளை ஞர் மகாநாடு, சங்கீத மகாநாடு, விவசாய கைத்தொழில் காஷி கள் இவைகளையும் 3வது மகா நாட்டுடன் நடத்துவதென தீர் மானிக்கப் பட்டது.

4. சுயமரியாதை சங்கத்தை ரெஜிஸ்டர் செய்ய வேண்டுமெ ன்றும், ஈரோடு தலைமை ஸ்தல மாயிருக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

5. தமிழ்நாடு, கேரளம், மகாய்நாடு இலங்கை இந்த நாடு களில் சுயமரியாதை சங்கத்தின் கிளைஸ்தானங்கள் ஏற்படுத்த வே ண்டுமென்று தீர்மானிக்கப்பட் டது.

6. சென்ற மகாநாடுகளின் தீர்மானங்களை சங்க அங்கத்தி னர்கள் தங்கள் வாழ்கையில் அமு லுக்கு கொண்டு வந்து மற்றவர் களுக்கு வழிகாட்டியாயிருக்க வேண்டுமென்றும தீர்மானிக்கப் பட்டது.

7. தமிழ்நாடு, இலங்கை ஆகிய நாடுகளில் சுயமரியாதைச் சங்கத்தின் கொள்கைகளைப்பிரசா ரம் செய்யவும், ஆங்காங்கு சுய மரியாதை சங்கங்கள் நிறுவவும், திரு அய்யாமுதலு அவர்களைக் கேட்டுக்கொள்வ தென்றும், அவருடைய பிரயாணச் செலவு களை சங்கத்தினின்று கொடுப்ப தென்றும் தீர்மானிகக்ப்பட்டது.

பிறகு அரசியல் சம்பந்தத்தை ப்பற்றியும் அதனால் இயக்கத்தி ற்கு ஏற்பட்ட சாதகபாதகங்களை ப்பற்றியும் அங்கத்தினர்களுக் குள் ஏற்பட்ட அபிப்பிராய பே தங்களைப்பற்றி அங்கத்தினர் கள் நிர்வாக சபை அங்கத்தினர் கள் முதலியவர்களின் யோக்கிய தாம்சங்கள் இன்ன இன்னவை யும் இருக்கவேண்டும் என்பதை ப்பற்றியுப் பலமான வாதப்பிரதி வாதங்கள் நடந்தன. முடிவில் அது விஷயமாயும் இனி நடந்து கொள்ள வேண்டிய விஷயங்க ளைப்பற்றியும் மகாநாட்டில் தீர் மானிப்பதென்றும் முடிவு செய்து தலைவர், காரியதரிசி ஆகி யவர்கள் ஒருதடவையாவது இங்கிலாந்து ருஷியா முதலிய மேல்நாட்டுப் பிரயாணம் செய்து வர வேண்டும் என்றும் பேசப் பட்டது. சங்கத்தினுடைய நடவடிக்கைகளையும் மகாநாடு களின் நடவடிக்கைகளையும் தண்டு விளம்பரமாகப் பிரசாரம் செய்ய வேண்டுமென்றும் பேச ப்பட்டது.

தமிழ் நாட்டுப்புரோகித மறுப்புச்சங்கம், உறையூர்.

இச்சங்கத்தினுதரவில் சாதிமத பேத மற்ற கலப்புத் திருமணங் கள் சீர்திருத்த முறையில் செ ய்து வைக்கப்பெறும். பல பகு திகளிலும் பல திருமணங்களிது வரை நிகழ்ந்திருக்கின்றன. இச் சங்கத்தின் சார்பில் திருமணம் செய்து கொள்ள விரும்பும் பெ ண்களும் ஆண்களும விதவைக ளும் பொட்டுக்கட்டிக்கொண்டு ள ள மகளிரென்று கருதும் "தாசி" வகுப்பினருமாகிய ஒவ் வொருவரும் அவரவர்கள் நிலை மையை நன்கு விளக்கி விருப் பத்தை விபரமாக அறிவித்தால் அதற்காவன செய்ய சங்கத்தா ரென்றும் தயாராயிருக்கின்ற னர். திருமணத்தின் முடிவு வரை எல்லாக் கடிதப்போக்குவர த்துகளும் மிக இரகசியமாகவே வைக்கப்பெறும். விருப்பமுள்ள சகோதர சகோதரிகள் தமக்கு எழுதலாமென்றுகாரியதரிசி திரு ச.ம.சி. பரமசிவம் அவர்கள் எழு தகின்றார்.

1931ம் ஆண்டுக்கு நிர்வாக உத்தியோகஸ்தர்கள். திருவா ளர்கள்.

தலைவர்:— டி. வி. சேமசுந்த ரம், பி. ஏ. பி. எல். வக்கீல், திருச்சி.

உப தலைவர்:— மே. வே. துரைசாமி, பொன்மலை.

காரியதரிசிகள்:—ச. ம. சி. பரமசிவம், உறையூர். எஸ். ஆ ரோக்கியசாமி, நகர்,

அங்கத்தினர்கள்:— நா. சு. மு. செல்வக்கணபதி, பூவாளூர். முதலியோராவார்கள்.

திரு டாக்டர் சர் ஹரிசிங் கோர்

திரு டாக்டர் சர்ஹரிசிங்கோர் கீழ்கண்ட கேள்விகளை, டில்லி சட்டசபையில் கேட்பதாக அறி வித்திருக்கின்றார்:—

(a) இந்துக்களென்பவர்கள், தாங்கள் ஏதாகிலுமொரு ஜாதி யில் சேர்ந்தவர்களெனக்கூறிக் கொள்ளுவதற்கு மனதில்லாவிட் டால், அடுத்த ஜனசங்கியை கணக்கில், தங்களுக்கு சாதியில்லை யென அவர்கள் கூறுவதை கவர் ன்மெண்டார் ஆக்ஷேபிப்பார் களா?

(b) அப்படி ஆக்ஷேபிப்பதாக யிருந்தால், இந்துக்களில பலர் தாங்கள் இந்து மதத்தைச்சேர் ந்தவர்களாக யிருந்த போதிலும், ஜாதிப்பிள்ளை வினைகளால் அநே கெடுதிகள் உண்டாகிக் கொண்டு வருவதால், அவர்களுக்கு ஜாதிப் பிரிவினைகளில்நம் பிக்கையில்லா மலிருப்பது கவர்ன்மெண்டாருக் குத் தெரியுமா?

(c) ஆகையால், அத்த கைய மனிதர்களின் தொகையை கவர் ன்மெண்டார் எவ்வாறு அறிந்து கொள்ளப் போகின்றார்கள்?

புதுவருட காலண்டர்கள்.

கீழ்கண்ட கனவான்களிடமி ருந்தும், கம்பெனிகளிடமிருந் தும், புதுவருட காலண்டர்கள் வந்தனத்துடன் வர்ப்பெற்றோம்.

1. சென்னை பிரிட்டிஷ் இந் தியா பேப்பர் கம்பெனி.

2 சென்னை பேப்பர் வியா பாரம் அக்பர் அண்ட்பிரதர்ஸ்.

3. திருச்சி, பட்டுஜவுளி வியாபாரம் எஸ். டி. நடேசம் பிள்ளை.

திருப்பூர் டி: மு. கோர்ட்டு.

1924 வது O.S. No. 659.
1930வது E.P. No. 2364.
1931 வது E.A. No. 133.

மு. ரா. ம. சுப. சுப்பிரமணி யஞ் செட்டியார் ஏஜண்டு ரங்க சாமி ஐயர்—Attaching decree holder வாதி.

தெய்வசிகாமணிக் கவுண்டன் 1-ம் பிரதி வாதி.

ஷை மனுதார் தரப்பில், உம் முடைய சொத்துக்களை Attaching decree holder ரும் மற் றவர்களைப் போல் ஏலத்தில் கோரமறுக்கொடுத்திருக்கிறபடி யால் அதைப்பற்றி உமக்கு ஏதா வது ஆக்ஷேபனை யிருந்தால் அதை நீர் காளது 1931ஹு பிப் ரவரிமீ 16உ 10மணிக்கு இந் தக் கோர்ட்டில் கேரேயாவது வக்கீல் மூலமாயாவது ஜாஜாகி அறிவித்துக் கொள்ளவும். அப் படிக்கில்லாவிட்டால் ஷை விஷய மாய் ஒருதலை பக்ஷமாக தீர்மா னிக்கப்படும்.

C. S. குப்புசாமி ஐயர்
வகீல், திருப்பூர்.

பெண் தேவை

இலங்கை தேயிலை மில்லின் மேனேஜர் (Teamaker) உத்தி யோகம் பார்ப்பவரும், மேல் வகுப்பைச் சேர்ந்தவரும், 80-ரூபாய்களுக்கு மேல் மாதவரு மானமுள்ளவரும், 26 வயது டையவருமான ஒருவருக்கு தற் கால நாகரீக வதியாயும், சிறிது கல்வி தேர்ச்சியுற், சுமார். 20 வய துடைய காயுமுள்ள ஓர் மண பெண் தேவை. "சுயமரியாதை" கொள்கைப்படி கலப்புமணம செய்துகொள்ளவும்தயார். விபர மறிய கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும.

P. P.
C/o "குடி அரசு,, ஈரோடு.

[5 ம் பக்கத் தொடர்ச்சி.]

உண்டு. ஆனால் இக்கு மற்றநாட்டில் இல்லாததான ஜாதி உயர்வுதாழ்வு முறை என்பது சாதாரண சமரச சன்மார்க்கத்திற்கு விரோதமாய் இருக்கின்றது. அதை அழித்தே ஆகவேண்டும். இதற்குநாம் தர்மசாஸ்திரம், கடவுள் செயல், கர்மபலன் ஆகியவைகளைக் கவனித்துக்கொண்டிருந்தால் பலனில்லை. சகோதரர்களே! நீங்கள் தர்மத்திற்கும் சாஸ்திரத்திற்கும், மதத்திற்கும், கடவுளுக்கும் எத்தனைகாலமாய் அடக்கி வந்திருக்கின்றீர்கள் என்பதை யோசித்துப்பாருங்கள். என்ன பலன் அடைந்து இருக்கின்றீர்கள்? இந்தநிலைமையில் உங்கள் ஆயுள்காலத்திற்குள் உங்களுக்கு சமரச விடுதலை உண்டு என்று கருதுகின்றீர்களா? இன்றைய நிலைமையேதான் உங்கள் வாழ்க்கையின் பலன், முடிவு, லக்ஷியம் என்று கருதுவீர்களானால் நீங்கள் எதற்காக நாளையதினம் வரையில்கூட உயிருடன் இருக்கவேண்டும் என்று கருதுகின்றீர்கள் என்பது எனக்குப்புலப்படவில்லை. மனிதன் வாழ்ந்திருக்கக் கருதுவதற்கு ஏதாவது அர்த்தமோ, லக்ஷியமோ இருக்கவேண்டும். சும்மா அறைத்த மாவை அறைத்துக்கொண்டிருப்பதுபோல் வெரும் ஆகாரம் உட்கொள்ளவும், உட்கொண்டதை மலமாக்கவும் என்பதற்காக அறிவும், சுவாதீன வுணர்ச்சியும், ஞானமுமற்ற ஜந்துக்கள்இருக்கின்றதே. இதுபோதாதா? இனி மனிதன் என்றும், ஆறறிவு பகுத்தறிவு உள்ளவன் என்றும் சொல்லிக்கொண்டு, பண்டிதன் என்றும் பணக்காரன் என்றும், கடவுளை கண்டு பிடித்து அடையும் மார்க்கங்களான பலமதங்களையும் பின்பற்றி கடவுளென்ற பணத்தையும், நேரத்தையும், ஊக்கத்தையும் செலவு செய்கின்ற மனிதனும், நல்ல ஆகாரவஸ்துக்களை மலமாக்குவதற்காக வாழவேண்டுமா என்று கேட்கின்றேன். இதைப்போன்ற அறிவீனமும் அவமானமும் ஆனகாரியம் மனிதசமூகத்திற்கு வேறொன்றில்லை என்றே சொல்லுவேன். இத்தகைய மனிதசமூகம் அழிந்துபோவது ஜீவகாருண்ணியத்தை உத்தேசித்தாவது மிகவும் அவசியமானதென்று தோன்றுகின்றது.

ஆகவே உங்கள் லக்ஷியங்களை முடிவுசெய்து கொள்ளுங்கள். அதை நீங்களே அடைய முயற்சி செய்யுங்கள் அதை மற்றொரு ஜன்மத்திற்கு என்று ஆயோக்கியர்களின் வார்த்தைகளை நம்பி எதிர்பார்த்துக்கொண்டு வீணாய்-ஏமாந்து போகாதீர்கள். இந்த ஜன்மத்தில் உங்களை ஏமாற்றுவதற்காகவே அடுத்த ஜன்மம் என்றும் புரட்டை. கற்பித்திருக்கின்றார்கள். முன்ஜன்ம சங்கதி ஏதாவது ஒன்று உங்கள் சரீரத்திலிருந்து உதிர்ந்தஒரு மயிர்த்துண்டாவது உங்களுக்கு இந்த ஜன்மத்தில் ஞாபகமிருந்தால் அல்லவா இந்தஜன்ம காரியங்களின் செய்கைகளோ பலனோ உங்களுக்கு அடுத்த ஜன்மத்தில் அறிபவோ, அனுபவிக்கவோ முடியாப் போகின்றது. அன்றியும் கடவுள் உங்களை இப்படிச் செய்துவிட்டார் என்று மூட்டாள்தனமாய்க்கருதி உங்கள் கஷ்டத்தை நிலைநிறுத்தி உங்கள் சந்ததிகளுக்கு விட்டு விட்டு சாதாதீர்கள். உணர்ச்சியும் அறிவும் அற்ற சோம்பேறிக்குத்தான்கடவுள் செயல் பொருத்தமாக இருக்கும். மற்ற எனக்கு அதுசிறிதும் பொருந்தாது. நீங்கள் என்ன சோம்பேரியாகின்றீர்கள்—கடவுளுக்கு இடம் கொடுத்து கோயில்கட்டி உறுப்படிகளை அதிகமாக்கி நமது குறைகளையும் கஷ்டங்களையும் முறையிட்டு முறையிட்டு அழுதுவந்தது போதும் என்றே சொல்லுகின்றேன். இனி அந்தப் பக்கம் திருப்பிப் பாராதீர்கள் உங்கள் அறிவையும் மனிதத்தன்மையையும் திரும்பிப் பாருங்கள். அது சொல்லுகின்றபடி கடவுங்கள். உங்கள் பொருப்பை அதின்மீது போடுங்கள். உங்கள் தவறுதல்களுக்கும் நீங்கள் பயன் அடையாமல் போனதற்கும் காரணம் சொல்லும்படி உங்கள் அறிவைக்கேளுங்கள். அதை மதியுங்கள். அதனிடம் நம்பிக்கை வையுங்கள். அது உங்களை சரியான வழியில் செலுத்தும். "கடவுளை"ப்போல் அவ்வளவு மோசமும், புரட்டும், ஆனதல்ல உங்கள் அறிவு. அதற்கு உணவும் வளர்ச்சியும் மற்ற நாட்டு வர்த்தமானக்களும் உங்கள் நடுநிலைமையுமே யாகும். ஆகையால் மற்ற நாட்டு வர்த்தமானங்களை உணர்ந்து நீங்கள் நடுநிலைமையில் இருந்து உங்கள் அறிவுக்கு பூசைபோட்டீர்களானால் வந்துவிட்டது அன்றே சமரசம்! சன்மார்க்கம்!! விடுதலை!!! இதில் எனக்கு சிறிதும் சந்தேகமில்லை.

தவிர பெண்கள் விஷயமாய் சில வார்த்தைகள் சொல்ல வேண்டி இருக்கின்றது. அதை சற்று கவனமாய் கேட்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பெண்மக்களை இன்று ஆண்கள் நடத்தும் மாதிரி மேல்ஜாதிக்காரனை கீழ்ஜாதிக்காரன் நடத்துவதைவிட, பணக்காரன் ஏழையை நடத்துவதைவிட, எஜமான் அடிமையை நடத்துவதைவிட மோசமான தாகும்.

அவர்கள் எல்லாம் இருவருக்கும் சம்மந்தமேற்படும் சமயங்களில் மாத்திரம்தான் தாழ்மையாய் நடத்துகின்றார்கள், ஆண்கள் பெண்களை பிறவி முதல் சாவுவரை அடிமையாயும் கொடுமையாயும் நடத்துகின்றார்கள். அதுவும் நமது நாட்டில் மிகவும் மோசமாய் நடத்துகின்றார்கள். அந்த ஒரு காரணமே இந்தநாடு இன்றுமிருக்கும் நிராயத்தில் இருப்பதற்கு காரணமாகும். நாம் எல்லோரும்அடிமைவயிற்றில் பிறந்து அடிமைகளால் வளர்க்கப்பட்டோம் என்பதை மறக்கின்றீர்களா என்று கேட்கின்றேன். நான் எத்தனை பெண்டாட்டி வேண்டுமானாலும் கட்டிக்கொள்ளுவேன் எத்தனை பிழைகளானாலும் எனக்கு பெண்டாட்டி வேண்டும். நான் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் ஆசை நாயகிகளாக வைத்துக்கொண்டு அனுபவிப்பேன் ஆனால் பெண் ணைப்பிறந்த நீ ஒரு புருஷன்தான் கட்டிக்கொள்ள வேண்டும், அவன் செத்தப்போனாலும் புருஷன் என்பதாக ஒரு ஜீவன் உலகில் உண்டு. ஆண் பெண் சேர்ந்து அனுபவிக்கும் இன்பம் என்பதாக ஒரு குணம் உண்டு என்பதை மறந்துவிடவேண்டும் என்று விதி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இதற்கும் கடவுள், மதம், முன்ஜன்மப்பலன்சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கின்றது. இது மிகவும் அதிதியும், அயோக்கியத்தனமான விஷயமாகும் இத்தச்கொடுமைகளை ஆண்களால் மாற்றிக்கொள்ளலாம் என்றும், பெண்கள் அப்படி மாற்றிக்கொள்ள நினைப்பது சுத்தமூட்டாள் தனமாகும் என்றே கருதப்பட்டிருக்கின்றது. ஆண்களைப்போலவே பெண்கள் செய்யத்தயாராக வேண்டும் ஆண் இரண்டு வைப்பாட்டிகளை வைத்தால் பெண்கள் மூன்று ஆசை நாயகர்களை வைத்துக்கொள்ள முற்படவேண்டும். உடனே நிலைமை சரிபட்டுப்போகும். உண்மையான சமரசம் தோன்றி விடும். பிறகு இருவருக்கும் கஷ்டமேயிருக்காது. சிலர் இப்படிச்சொல்லுவது தப்பு என்றும், ஒழுக்கம் கெட்டுப்போகும் என்றும் ஆண்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் புத்தி சொல்லுங்கள் என்றும் சொல்லுவருவார்கள். ஆண்களுக்கு புத்தி அதேகாலமாக சொல்லியாய்விட்டது. கல்யாணம் செய்து கொள்ளுவதே அடிமைப் பிரவேசம் என்றாய் விட்டது. ஒருமனிதனுவது இவர்கள் சொல்லுகிறபடி யோக்கியனாகவில்லை.

ஆகவே அது இனி பயனற்றதாய் விட்டதால்தான் வேறு மார்க்கத்தை கடைப்பிடிக்க வேண்டியதாய் விட்டது. இதுவரையில் ஆண்கள் பெண்களை அடிக்காதீர்கள், அடிக்காதீர்கள் என்று சொல்லிப் பெண்களுக்கு நியாயம் வழங்க முற்பட்டோம். பலனேற்படவில்லை என்று கண்டு விட்டோம்.இப்போது நாம்பெண்களிடம் சென்று இனி ஆண்கள் உங்களை அடித்தால் திருப்பி அடியுங்கள் என்று சொல்லுகின்றோம் இதனால் என்ன தப்பு என்பது விளங்கவில்லை. இது போல்தானே ஆண்கள் உங்களை வஞ்சித்தால் நீங்கள் அவர்களை வஞ்சியுங்கள் என்று சொல்லுகின்றோம். இஷ்டப்பட்டவர்கள் இந்த முறையில் சேர்ந்து வாழட்டும். இஷ்டமில்லாதவர்கள் கல்யாணத்தை ரத்து செய்து கொண்டு தனித்தனி வாழட்டும். இதனால் உலகத்திற்கு என்ன கஷ்டம் வந்துவிடும்? ஆகையால் இந்த விஷயங்களில் பெண்கள் யோசித்து தைரியமாய் முன்னுக்கு வரவேண்டும் பயப்படக்கூடாது. பெண்கள் தங்கள் வாழ்வுக்கு ஒரு வகைசெய்து கொள்ளவேண்டியது பெண்கள் விடுதலைக்கு முக்கியமான அஸ்திவாரமாகும். முக்கியமாய் கண்டபடி கணக்கு வழக்கில்லாமல் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடாது. இதில் அதிக ஞாபகமிருக்கவேண்டும். பிள்ளை பெறுவது கடவுள் செயல் என்றும், அது பாக்கியத்தில் ஒன்றென்றும் கருதிக்கொண்டு, மூட்டாள் தனமாய் மக்கள் கஷ்டப்படுகின்றார்கள். ஆசீர்வாதம் செய்யும் போது 16 பிள்ளைகள் பிறக்கவேண்டுமென்று ஆசீர்வாதம் செய்கின்றார்கள். இது அவர்கள் சொல்லுகின்றபடியே நடக்கும் என்று பயந்து கொண்டு நான் பேசவரவில்லை. ஆனால் இப்படி ஆசீர்வாதம் செய்வது எவ்வளவு மூட்டாள் தனமும் பொருப்பற்ற தன்மையும் என்று சற்று யோசித்துப்பாருங்கள்.

ஆகவே இந்தக் காரியத்தில் எத்தனைக்கெத்தனை ஜாக்கிரதையாயிருந்து கண்டபடி பிள்ளை பெறுமல் தப்பித்துக் கொள்ளுகின்றீர்களோ அத்தனைக்கத்தனை கவலையும் தொல்லையும் ஒழிந்து சுதந்திரமும் விடுதலையும் அடைந்தவர்களாவீர்கள். எவனே தெரிவில் போகின்றவன் "இப்படிச் சொல்வதால் ஒரு சமயம் எல்லோருமே பிள்ளை பெறுமல் இருந்து விட்டால் உலகம் விர்த்தியாவது எப்படி என்பான். இப்படிப்பட்டவன் சுத்த மூடன் என்று தான் அருத்தம். உலகம் விர்த்தியாவதற்காக மனிதன் பல குட்டிகள் போட்டு தொலைப்படவேண்டுமா? நாய், பன்றி, கழுதை, குதிரை, கோழி, குருவி முதலிய மிருகம் பட்சி ஊர்வன முதலிய ஜீவன்கள் போடும் குட்டிகளுக்கும் பொறிக்கும் குஞ்சுகளும் பீச்சும் குஞ்சுகளும் போதாதா என்று கேட்கின்றேன்.

வீண் அர்த்தமற்ற வார்த்தைகளுக்கு காது கொடுக்காதீர்கள். ஒவ்வொன்றையும் நன்றாய் யோசித்துப் பார்த்து உங்கள் அபிப்பிராயப்படி எதையும் முடிவு செய்யுங்கள். முடிவுப்படி நடவுங்கள் என்பதாகப் பேசினார்.

உடனே நாலு அணா (ஸ்டாம்பு) அனுப்பி விபரம்தெரிந்து கொள்க.
4 இலவம், லீவர் பாக்கெட் வாச்
,, லீவர் ரிஸ்டு வாச்.
,, அலாரம் கிளாக் &
B டயம் பீஸ்கள். Apply to:-
P B No. 5,05, BOMBAY,

சென்னையில் குடி யரசுப் பதிப்பக புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
எஸ். சுப்பிரமணிய பிள்ளை,
17—பாரீஸ் வெங்கடாஜல
அய்யர்வீதி,
சென்னை ஜி. டி.

சுயமரியாதையே சுகவாழ்வு

சுசீந்திரம்.

நாளது தைமீ 14ந் தேதியன்று நாகர்கோவில் போலீஸ் இன்ஸ்பெக்டரால் சார்வு செய்யப்பட்ட சம்மனிற்கிணங்க நாணும் திரு. காந்திராமனும் 17 தேதி திருவனந்தபுரம் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட் திரு. உள்ளூர் பரமேசுர அய்யர் அவர்கள்முன்பாக ஆஜரானேம். (போலீஸ் உதவி சூப்பிரண்டு திரு. அச்சுதன் பிள்ளை அவர்களும் ஆஜராயிருந்தார்.)

மாஜிஸ்திரேட் எங்களை அவருடைய அறைக்குள் அழைத்துச் சென்று ஓர் சிவப்புக்கடிதத்தைக்காட்டி நாங்கள் அனுப்பியதா? அதிற்கண்டபடி தை 27 தேதி நாங்கள் (திரு. காந்திராமனும் நாணும்) நடந்துகொள்ளப்போகிறோமா என்றுகேட்டார் நாங்கள் அந்தக்காகிதத்தை வாங்கிப்படித்துப்பார்த்தோம். அதில்:— திரு. காந்தி ராமனும் நாணும் தைமீ 27தேதி பறையர்களையும்ஈழுவர்களையும் சுசீந்திரம் தெப்பக்குளத்தில் குளிக்கச்செய்து கோவிலுக்குள் (காணிக்கைகளுடன்) அழைத்துச்செல்லுவதாகவும் கோவிலதிகாரிகள் எந்கிளர்த்தடை செய்யாமலும் கலவரங்கள் நிகழ்த்தாமலுமிருக்க வேண்டிய ஒழுங்குகள் மாஜிஸ்திரேட் அவர்கள் செய்யவேண்டுமென்றும் எழுதி நாங்கள் எழுதியதுபோல் எழுதிகை யொப்பங்களுமிடப்பட்டிருந்தது.

மாஜிஸ்திரேட் அவர்களிடம் அந்தக்கடிதம் எங்களுடைய தல்லவென்றும், அதிற்கண்ட அரிய எண்ணங்கள் எங்களுக்குண்டெனினும்தை மீ 27 தேதியிலே ஒடுக்கப்பட்டவர்களை ஆலயத்திற்கு அழைத்துச்செல்ல முடிவு செய்தாகவில்லை யென்றும், எங்களுடைய "தீண்டாமை விலக்கு" வேலையில் விருப்புக்கொள்ளாத சிலர்களே அண்டிப்பிழைக்கிறவர்களும் அவர்களுடைய சகாக்களும் குறும்புத்தனமாக இதை எழுதி அனுப்பியிருக்கவேண்டுமென்றும் இந்தப்பொய்க்காகிதத்தை வைத்துக்கொண்டு எங்களை வெகு தூரமிருந்து வரச்செய்து கஷ்டப்படுத்தியதில் சங்கடமுண்டென்றும் நாங்கள் தெரிவிக்க அவர் அவற்றையும் எங்கள் வாக்கு மூலமாக எழுதி எடுத்துக் கொண்டார். நாங்களும் அதிற்சை யொப்பமிட்டுக்கொடுத்தோம்.

பின்னர், மாஜிஸ்திரேட் அவர்கள் தமக்கு தனிஹோதாவில் எங்கள் இப்பக்கத்தில் அனுதாபமுண்டென்று தெரிவித்து எங்களை அனுப்பி வைத்தாரென வி.நீலகண்டன்எழுதுகிறார்.

திருப்பூர் பனியன்கள்.

முதல் தரம் கார்டிகன் 32" டஜன் 1க்கு விலை 3—12—0 வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்.

The General Knitting factory, TIRUPUR (S India)

சுயமரியாதை பெற்றால் சுயராஜ்ஜியம் பெறலாம்.

வந்துவிட்டது! வந்துவிட்டது!!

கைவல்யம்

அல்லது

கலக்கியமனம்

(கைவல்ய சாமியார் கட்டுரைத் தொகுதி)

(கைவல்ய சாமியார் படத்துடனும், சரித்திர சுருக்கத்துடனும்.)

(முதல் பாகம்) இதன்விலை அணு 0—8—0

"குடி அரசு" "ரிவோல்ட்" மாலைகள்

"குடி அரசு" மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷ காலம் வெளியான மலர்களைத்தனித்தனிவருஷமாக பைண்ட் செய்து புஸ்தகங்களாக வைக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு வருஷ மாலை கிரையம் ரூ. 5—0—0.

"ரிவோல்ட்" ஒரு வருஷ மாலை பைண்ட் செய்தது. கிரையம் ரூ. 5—0—0.

குறிப்பு:— சில காப்பிகளே கைவசமிருப்பதால் வேண்டியவர்கள் முன்னதாக ஆர்டர் செய்யக்கோறுகிறோம்: ஆர்டருடன் ஒரு ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்:

மானேஜர், 'குடி அரசு' புத்தகாலயம், ஈரோடு.

3ம் பக்கம் தொடர்ச்சி.

களில் நம்மைத் தற்காலம் பலமாகக் கட்டுப்படுத்துவது எதுவென்று பாருங்கள். சுயநலமும் கொடுமையும் பற்பல சம்பிரதாயங்களாக உருவெடுத்து நிற்கின்றன. பாலிய விவாஹமும் விதவைகளுக்கு இட்ட இரக்கமற்ற இடையூறுகளும், பொதுவாக ஸ்திரீகளை நடத்தும்முறையும் தீண்டாமை என்ற கொடியவழக்கமும் இவையெல்லாம் என்ன? மனிதவாழ்விற்கு இன்பத்தையும் சமரசத்தையும் அளிக்கவல்ல நல்ல உணர்ச்சிகள் யாவையும் நமது உள்ளத்தினின்று கசக்கிப் பிழிகின்ற வழக்கம் வழக்கம் என்று சொல்லப்படும் கட்டுப்பாடல்லவா? இனி ஜாதிவித்தியாசம் என்று சொல்வதுதான் என்ன? அது மனிதர்களுடைய சுயநலத்திற்கு ஆதாரமான ஏற்பாடே யன்றி வேறல்ல. ஒரு மனிதன் மற்றொரு மனிதனைக்காட்டிலும் வேறுனவனென்றும் மற்றவர்களுக்கில்லாத ஒரு பெருமையும் உண்மையும் தனக்குண்டென்றும் நினைத்து ஆனந்தப்படுவதற்கும் ஒரு ஏற்பாடாக இருக்கின்றதே யொழிய வேறில்லை. இவையும் இன்னும் இவைபோன்ற பலவுந்தான் நாம் நம் முன்னோர்களிடமிருந்து பெற்ற செல்வமாகப் பாராட்டிப் பாதுகாத்து வருகின்றோம். இவைகளுடைய பாரத்தினால்தான் நாம் நசுக்கப்பட்டு வருந்துகின்றோம்..... இந்தியாவின் ஆத்மஸ்வரூபத்தை மறைத்து அதனைத் தோன்றவிடாமல் செய்யும் களங்கத்தைப் போக்குவீர்களாக"

".....இந்த ஆத்மசக்தி விடுதலையடைந்து வெளிப்படுமானால் உலகமுழுதும் ஒருபுது உணர்ச்சி உண்டாகும் அற்புதத்தை நாம் கண்ணாரக் காணலாம். அத்தகைய ஆத்மசக்தியினால் ஆகாதது ஒன்றுமே யில்லை. அதுமாத்திரம் விடுபடுமானால் அதை எதிர்த்து நிற்க எதாலுமாகாது. இந்தியாவின் அரசாங்க விசயத்தில் சர்வசாதாரணமாக சுதந்திரத்தைக் கொண்டு வந்து விடுவதோடுகூட இந்தியா தேசமானது எந்தமேலான வாழ்வினிற்குக் காத்துக் கொண்டிருக்கின்றதுஎன்று நான்நம் புகிறேனே—அஃதாவது உலகமுழுவதும் ஆத்மஞான ஒளியை வீசக்கூடிய ஆதமஞான சூரியனாக விளங்கும் உத்தமமான வாழ்வை இச்சாமாத்திரத்தில் அடையச்செய்யும் என்பது—அந்தமேலான வாழ்வு நிச்சயம் கிடைத்துவிடும்" என்று கூறிய அறிஞர் கிருஷ்ணமூர்த்தி கூறும் அனுபவத்தை சுயமரியாதைக் காரர்கள் செயற்கையில் செய்துகாட்ட முயற்சிக்கின்றார்கள். இப்பொழுதில்லாவிடினும் இன்னும்சில காலத்திற்குள்ளாவது காங்கிரஸ் வாதிகள் சுயமரியாதை இயக்கம் இந்தியாவின் விடுதலைக்காக ஏற்படுத்திய அரும் பெரும் திட்டம் கண்டு ஆனந்தித்து அதன் வழினின்று தொண்டாற்ற முன்வருவார்கள் என்பது நிசயம்.

நம்மிடத்தில் நம் விடுதலைக்கு மாருக ஏதேனும் குறைகளிருக்குமேயானால் அவைகளைப் பகிரங்கமாய் எடுத்துக்காட்டி அவைகளை உடனே ஒழித்துவிட முயற்சிக்கவேண்டுமென்பதே சுயமரியாதை இயக்கத்தின் மூக்கிய கொள்கை. அந்தக் கொள்கையின் பேரிலே நம் சமூகத்தை பீடித்துள்ள மூட நம்பிக்கை, பழக்கவழக்கம் முதலிய எல்லாத்தொத்து நோய்களுக்கும்காரணமாய்யிலிருப்பதாகிய நாட்டுப்பழங்காலப் புராணக்குப்பைகளே என்று எடுத்துக்காட்டி அக்குப்பை கூளங்களை ஒன்றாய்க் கூட்டிஎரித்துவிட்டால் தொத்து நோய்களை அடியுடன் ஒழித்துவிடலாம் என்று கூறுகிறது.காங்கிரஸ்இயக்கமோஉண்மையையறியாமல் நம்மிடத்திலுள்ள குற்றங்களை வெளியே எடுத்துக்காட்டுவது மிகவும் கேவலம். சுயராஜியம் வந்தால் எல்லாம் சரிப்பட்டுப் போம என்று கூறுகிறார்கள். இத்தொத்து வியாதியாய் நாம் சுயராஜ்யம்கேட்கப்போவதற்கு எழுந்து நடக்கவும் சக்தியற்றிருப்பதோடு புராணக்குப்பையால் நம்மக்களிடையே உண்டாக்கியப் பைத்தியமோ சுயராஜியம் கேட்கப்பல ஜாதியார்களும் ஒன்றுயப் போகும் வேளையில் ஒரு பார்ப்பனப்பைத்திய காரன் பக்கத்தே செல்லும் ஆதிதிராவிட சகோதரனைப்பார்த்து அடே நீ என்பக்கத்தில் வரவா, அடே பரப்பயலே உனக்கு அவ்வளவு கொழுப்பா? என்று கூறுகின்றான் மற்றொரு வெள்ளாளன் பக்கத்தே சுயராஜியம் கேட்கச்செல்லும் நாடார் சகோதரனைப் பார்த்து, நெறுங்கிச் செல்லுவதைப்பார்த்து சீறுகின்றான் இவ்வாறு சுயராஜ்யம் கேட்கச்செல்லும்பொழுது ஒருவான் கழுத்தைஒருவன் பிடித்துநெரித்துக் கொன்றுவிடவேண்டுமென்றுமுயற்சிக்கின்றான். ஜனத்தொகையில் குறையும்பலமும் படிப்பும் குறைந்த ஜாதிக்காரர்களோ இச்சாதியிறுமாப்பார்களின் செயலைக்கண்டு வெள்ளைக்காரன் ஒரு மந்திரியல்லதலைவிருக்கும் பொழுது உயர்ந்த ஜாதிக்காரர்கள் நமக்குப் பல தொல்லைகளியற்றி வந்தனர், வருகின்றனர். போனது போகட்டும் சுயராஜியம் வந்தால் எல்லாம் சரிப்பட்டுப் போகும் என்று அவர்களோடு சேர்ந்து சுயராஜியம் கேட்கச்செல்லும் பொழுதே (காங்கிரஸில் சேர்ந்து உழைக்கும் பொழுதே) நம்மைப் பக்கத்தில் நிற்கவும் சம்மதமின்றித் திட்டுகின்றார்களே இச்சாதி திமிர்கொண்ட பைத்தியக்காரர்கள் வசம் நாடும் அதிகாரமும் சிக்கிக்கொண்டால் நம்மையெல்லாம் நேராக மோட்சலோகத்திற்கு பால் போர்ட்டு கொடுத்து அனுப்பிவிடுவார்கள் என்று மேல் ஜாதியார்களாகிய தேசியவாதிகள் என்பவர்கள்மீது நம்பிக்கையற்று சுயராட்சியமும் வேண்டாம் வெள்ளைக்கார ராஜியமே வேண்டுமென்று திரும்பிவிடுகின்றார்கள். எனவே நாமெல்லோரும் ஒற்றுமையாய் ஒன்றுசேர்ந்து எக சகோதரர்கள்போல் அன்புடன் கூடிவெள்ளைக்காரனிடமிருந்து நம் இராஜியத்தை மீட்க விரும்பினால் நம்மிடையே அண்டிநிற்கும் குற்றம் குறைகளையெல்லாம் மக்களுக்கு எடுத்துக்காட்டி அவைகளை ஒழித்து நம்மிடையே பற்றிநிற்கும் தொத்துநோய்களுக்கெல்லாம் மூலாதாரமான புராணக்குப்பைகளை யெல்லாம் பகுத்தறிவு என்னும் அக்கினிகொண்டு நாசமாக்கி நம் கால்களையும் கைகளையும் கட்டியிருக்கும் கயிறுகளை [பழக்கவழக்கங்களை] அறுத்தெரிதல் வேண்டும் என்று ஓயாது நிரும்ப நிரும்ப சுயமரியாதை இயக்கம் பேரொலி புரிகின்றது. இதன் உண்மையான கொள்கையைக் கண்டு அறிஞர் கிருஷ்ண மூர்த்தி ".....பெருவாழ்வை இந்தியா அடையுமாறு அதனை எழுப்புவதற்கு நாம் செய்ய வேண்டியதென்ன? முதலாவது நமது வாழ்க்கையில் உண்மை விளங்க வேண்டும், நமது குற்றம்குறைகளை ஒழிக்காமல் நேராகப்பரிசோதிக்கும் மனப்பான்மையை அடையவேண்டும்; இவ்வாறு தெளிவாய் ஆராய்ந்து பார்த்ததிலுல் அத்தகுற்றவருறைகளைப்போக்கவேண்டும் என்ற தணிக்கமுடியாத தாகம் வேண்டும். பிறகு அதனால் என்ன கஷ்டம் வந்தாலும் சரி, நம் முடைய வீட்டையே நாம் ஒழுங்கு படுத்தத் தீர்மானமான ஒரு முயற்சி செய்யவேண்டும்; அவசியமானால் பழயகட்டுப்பாடுகளை உதறித்தள்ளி தற்கால உணர்ச்சியை மேலாக மதித்துப் புதிய வாழ்வை ஏற்றுக்கொள்ளவேண்டும். நம்மைக் கட்டியிருக்கும் கனமான சங்கிலிகளை இழுத்துக் கொண்டே அலைத்தைப்படுங்காலம் போய்விட்டது. நமது கிணசரி வாழ்வில் பிதாகாட்டார் கண்டு கைக்கக் கூடிய அம்சங்கள் இருப்பது இழிவென்று உணரவேண்டும். நமது குற்றங்குறைகளை உலகத்தின் கண்கள் பார்த்துக்கொண்டு அவற்றை ஆதாரமாகக்கொண்டு நம்மைப்பற்றி அபிப்பிராயப்படும் சமயத்தில் நாம்மத்திரம் கண்மூடித்தனமாய் வீண் ஜம்பம் பேசிக்கொண்டிருப்பதில் என்ன பயன்? சுருங்கச்சொல்லுமிடத்து நமது இந்திய நாட்டின் வாழ்வை மனிதவாழ்வின் உண்மையான போக்குடன் இசையும்படி முழுதும மாற்ற வேண்டும் அப்படி மாற்றுவதற்கு நாம் எல்லோரும் முன் வந்தால்தான் இந்தியாவிற்கு உண்மையான விடுதலை ஏற்படும்" என்று திரு கிருஷ்ணமூர்த்தியவர்கள் மொழிந்துள்ளார்கள். அவர் மொழிந்துள்ள வாக்கியங்களில் "சுயமரியாதை இயக்கம்" என்ற வார்த்தையை உபயோகிக்காவிடினும் அவர் மொழிந்துள்ள கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு வேலைசெய்யும் இயக்கம் ஒன்றே ஒன்றுதான் இந்திய நாட்டிலுண்டு. அதுதான் சுயமரியாதை இயக்கம் என்று திரு கிருஷ்ணமூர்த்தி மட்டுமல்ல இத்தமிழ் நாட்டு சிறார்களும் நன்கறிவர். இனிதிரு கிருஷ்ணமூர்த்தியவர்கள் தாம் கண்கறிந்து கொண்ட செயல்களை இந்தியாட்டின் விடுதலைக்காக செய்கையில் காட்டுவதோடு தாம் கண்டமேலான கொள்கைகளுக்கு தம் மூழுச்சக்தியையும் செலவழிக்கும் சுயமரியாதை இயக்கத்திற்கு தம்மாலியன்றஆதரவு காட்டுவாராக.

இறுதியாக யான் கூறுகிறேன் சுயமரியாதை இயக்கம் இந்தியா சுயராட்சியம் அடைவதற்கு விரோதமாய் வேலை செய்யவில்லை யென்றும் அவ்வாறு வேலை செய்வதாகப் பொய்ப்பிரசாரம் புரியும் தேசியப் போர்வையைப்பூண்ட சுயநலத்தோர் தன்மதிப்பியக்கத்தின் உண்மைத் தத்துவத்தை உணராதவர்கள் என்றும் காங்கிரஸ் இந்திய நாட்டை வெள்ளைக்காரன் ஆட்சியினின்று பிடுங்கி பணக்காரர்கள், உயர்ந்தஜாதிக்காரர் முதலியவர்களின் ஆதிக்கத்திற்குள் கொண்டுவர நினைந்து வெற்றிபெற முடியாதவழியில் வேலைசெய்து வருகிறதென்றும் தன் மதிப்பியக்கமோ இந்நாட்டை வெள்ளைக்காரனிடமிருந்து மீட்டி அரசாங்கத்தில் ஏழைகள், தாழ்ந்த சாதியார், பெண்கள் முதலியாவர்களுக்கும் பொதுவான ஓர் சமதர்ம ஆட்சியை ஏற்படுத்தி மக்கள் யாவரும் சகோதரத்வமாய் ஒருவருக்கொருவர் அன்பு பூண்டி எக்காலத்தும் இந்திய நாடு இந்தியர்கள் கையிலேயிருக்கும்படியான சால்வதமான பலமுடைய அரசாங்கத்தை எளிதல் பெறும்படியான வழியில் வேலை செய்து வருகின்றதென்றும் தன் மதிப்பியக்கத் தலைவர்களெல்லாம் ஒத்துழையா இயக்க காலத்தில் தமிழ் நாட்டில் அரும் பெரும் தியாகங்கள் செய்த வீர புருடர்களென்றும் பொதுஜனங்களுக்கு ஈண்டும் ஒரு முறை எடுத்துக்காட்டி காங்கிரஸ் இந்திய நாட்டு விடுதலைக்காகச் செல்லும் தவறான வழியினின்று தன்மதிப்பியக்கம் செல்லும் வழினிஷ்று தொண்டு புரிந்து இந்தியாவின் உண்மையான விடுதலைக்கு தொண்டாற்ற முயலும் நாளே இந்தியாவின் விடுதலைக்குஸ்திரமான அஸ்திபாரமிடும் நன்னாளாகும். அந்நாளே ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். இனியாவது காங்கிரஸ் வாதிகள் தாம் கொண்டமயக்கத்தினின்று தெளிந்து சுயமரியாதை இயக்கத்தின் மேன்மையை உணர்ந்து தொண்டுபுரிய முன்வருவார்களாக.

மதனலீலா படங்கள்.

64 வகை சித்தின்ப உருவ ஒரிஜினல் கிளேஸ் போட்டோ படங்கள் சகிபதிகளும, தனிமாதர்களும் கூடியது

ஆல்பம் உள்பட விலை ரூ. 5-0-0.

சாம்பல் டஜன் ரூ. 1-8-0.

வெளிநாட்டினர் ஆர்டருடன் ரூ. 2 முன்பணம் அனுப்பவும்.

கே. ஜீ. ஸ்டோர்,

8வது பீட், வேப்பேரி, சென்னை.

சுயமரியாதையே சுகவாழ்வு

விலைகள் குறைக்கப்பட்டது! விலைகள் குறைக்கப்பட்டது!!

வைத்திய பாஸ்கர

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

தமிழ் வைத்தியசாலை

(பல அன்பர்களின் விருப்பப்படி 1931-ம் ஆண்டு முதல் நமது தமிழ் வைத்திய சாலையில் தயாராகும் மருந்துகளின் விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றது மற்ற விஷயம் கேட்லாக்கில் காண்க.)

தைல ராஜன்

என்னும் பண்டித ஆனந்தரின்

மகாசந்தனுதித் தைலம்

இத்தைலம் எந்த காலத்திலும், எந்த தேசத்திலும், ஆண் பெண், மூதியோர், இளையோர், நோயுள்ளவர், நோயில்லாதவர், எல்லோராலும் உபயோகிக்கத் கூடியது. இத்தைலத்தை நாள் தோறும் சிரசில் தடவி சிகைவாரிக் கொள்ளவும், தலை முழுகவும் மிக மனோகரமானது. இதைத் தேய்த்துக் கொண்டு தண்ணீரிலேனும், வெந்நீரிலேனும் அவரவர்கள் வயது, பழக்கம் பருவகாலங்களுக்குத் தக்கபடி தலை முழுகலாம்.

நமது மகா சந்தனுதித் தைலத்தை நோயில்லாதவர்கள் உபயோகித்து வரின் கண்டத்துக்கு மேற்பட்ட ரோகங்களும், தோலப்பற்றின நோய்களும், நரம்பைப்பற்றின வாத ரோகங்களும், மேக ரோகங்களும், கர்ப்ப ரோகங்களும் வெட்டைச்சூடு, மூலச்சூடு, மூளைச்சோர்வு, நரம்பு பலவீனம் முதலியவைகளும் அணுகாது.

நோயாளர்களுக்கு சஞ்சீவிபோன்றது. இளமையில் நரைத்தல், மயிர் உதிர்தல், தலைவழுக்கை, கண்ணோய்கள், செவிநோய்கள், நாசியைப்பற்றின நோய் முதலியவைகளை நீக்குவதில் நிகரற்றது.

		முன் விலை.	குறைக்கப்பட்ட தற்போதிய விலை
மகா சந்தனுதித்தைலம்	24 அவுன்ஸ்	ரூ. 4—1—0	3—12—0
,, ,,	12 ,,	ரூ. 2—1—0	1—14—0
,, ,,	6 ,,	ரூ. 1—3—0	1—0—0
,, ,,	மாதிரி புட்டி	ரூ. 0—8—0	0—3—0

பண்டித ஆனந்தரின்

அமுதசுரபி (மகாகாய கல்பம்)

(இது சித்தர்களின் முறை)

இது ஆண், பெண் இருபாலாருக்கும் ஏற்பட்டுள்ள இருதய பலவீனம், மூளை பலவீனம், வெட்டைச்சூடு, மூலச்சூடு, நரம்புத்தளர்ச்சி, உடல் மெலிவு, கைகால் சோர்வு, அகாலமூப்பு, கண்மங்கல், விந்தை முக்கு, மூத்திரரோகம், ஸ்திரீகளின் கருப்பையைப்பற்றிய ரோகங்கள், மலட்டுநோய், அபஸ்மார ரோகங்கள் முதலிய நோய்களை நீக்கும். உடம்பின் உள்ளுருப்பு, வெளியுருப்புகளை வலிவடையச்செய்யும். இரத்தத்திலுள்ள கெட்டின அணுக்களை அதிகப்படுத்தி சப்ததாதுக்களையும் விருத்திசெய்யும். தமது செய்கையால் இழந்த பலத்தைத்திரும்ப அளிக்கும். இதன் முழு விவரம் கேட்லாக்கில் காண்க.

	முன்விலை	குறைக்கப்பட்ட தற்போதிய விலை
அமுதசுரபி லேகியம் ஒரு பவுண்டு	ரூ. 5—0—0	3—8—0
,, ,, அரை பவுண்டு	ரூ. 2—12—0	1—14—0

கேட்லாக்கு வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்

நமது மருந்துகளை வியாபாரம் செய்யும் நாணயமும் திறமையுமுள்ள ஏஜண்டுகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர்,

தமிழ் வைத்தியசாலை

221, தங்கசாலைத் தெரு, சென்னை.

தபால் படிப்பின் அற்புதம்!

10.0 மாணவர்கள்

இளமையிற் படிக்கவில்லை என்று வருந்தவேண்டாம்.

தமிழ் வாசிக்க, எழுதத்தெரிந்தவர்கள் நமது ஷ்பெஷல் மேட்ரிக்குலேஷன் கோர்ஸினைத் தபால் மூலம் படித்து சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் சீனியர் பாஸ் செய்தபின் காலேஜில் சேரலாம். அல்லது உயர்தர பட்டங்களுக்கு இங்கிலாந்து, கொழும்பு, சிங்கப்பூரில் உரிக்கலாம். லோயர், ஹைபர்கிரேட் உபாத்திமார்கள், குமாஸ்தாக்கள் ஆபீஸ் கீழ்தர உத்தியோகஸ்தர்களுக்கு அதிகப் பிரயோஜனமானது. 5 ம் லிஸ்ட் முடியப்போகிறது. பிராஸ்பெக்டசுக்கு உடனே இரண்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

டைரக்டர்,

அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,

ஆறுமுகநேரி, S. I. R.

எந்த மருந்திலும் வசப்படாத எவ்வித குஷ்டமானாலும் சரி, கவலை வேண்டாம் உடனே குணமாகும்.

இது பந்தயம் போட்டு பரீக்ஷிக்ககூடியது

சித்தாதி யெண்ணை.

100 வேலை தாம்பிரபற்பம் சாப்பிட்டும் தீராத குஷ்டம்குன நோய், குழிப்புண். விஷ குஷ்டம் செம்மேகம் ஊரல், வெண குஷ்டம், கருங்குஷ்டம், கருந்தேமல், சொரி, தர்ரீர் வடிதல், மூக்கடைப்பு, வீக்கம், தடிப்பு, கண்டமாலை கன்னப்புத்து, மதமதப்பு படை, குன்மம் வயிற்றுவலி, சூலை, கிரந்தி எல்லாம் கண்டிப்பாய் தீரும் கைகண்டது இது பழனியில் நம்மிடத்தான் கிடைக்கும் அனுபானத்துடன் 1-புட்டி ரூ. 7.

குறிப்பு:- அன்னிய நாட்டினர் தபால் செலவு ரூ. 2 சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும், விலாசம் தெளிவாக எழுதவும்.

விலாசம்:—

கே எஸ். பதி, வைத்தியசாலை படிநி, S.I.R,

மேயோ கூற்று,

"மேயோ கூற்ற மெய்யா பொய்யா" என்னும் புத்தகம் முதற்பதிப்பு காப்பிகள் 2000மும் செலவாகி விட்டபடியால், அதன் இரண்டாம் பதிப்பு அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம். இதன் விலை அணை 3. வேண்டுவோர் 4 அணை ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். மானேஜர்.

"குடி அரசு" பதிப்பகம், ஈரோடு.

டெலிபோன் நெ. 3789 தந்தி விலாசம்:—கோர்செய்ன்.

ஹெல்விட்டியா பிரைவேட் வைத்திய சாலை & சம்மாஷனை விடுதி,

வேப்பேரி தபால் ஆபீஸ் (சமீபம்) சென்னை.

மிஸஸ் மார்த்தா ஓகளி ஆரியா சூப்பரின்டெண்ட்.

சுத்த கதர்! உயர்ந்த கதர்!! நேர்த்தியான கதர்!!!

அகில இந்திய (கதர்) சங்கி ரஸ் சங்கத்தாரால் அங்கீகரிக்கப் பட்டது.

எங்களிடம் கதர் சம்மந்தப்பட்ட எல்லா ரகங்களும் இருக்கின்றன. வெளிநாட்டு ஆர்டர்கள் கிரமம் முழுமையும் அனுப்பி னல் கவனிக்கப்படும்.

ஈ. மு. தீ ஈ. ரு. வே. & Co.,

கதர் ஸ்டோர்,

சென்னிமலை.

(சங்கர் S I. Ry.)

சிட்டுக் குருவி லேகியம்.

தாது புஷ்டிக்கு மிக உயர்ந்தது சேர் 1-ச்கு ரூ. 15—0—0

தங்க பஸ்பம் 24-நாள் ரூ. 10.

அன்னிய நாட்டர் அட்வான்ஸ் அனுப்புக.

கி. பி. சாமி, சித்தமருத்து, செய்சாலை பழனி S.I.

கடவுளை வணங்க தரகர் ஏன்?

நிமிஷக்கணக்கில் தணமடைவதைவிட்டு ஏன் கவலேப்படுகிறீர்?

சுவாச காச நிவாரணி.

ஆயிரகணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினுல் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சனி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சனி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியடின் 1க்கு 1-4-0. தபால் கூலி அணு. 4.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மேடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I.


மதறுஸ் சோல் ஏஜண்டுகள்:—
தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெரு.
K. S. மேதா & Co., 234, சைனுபஜார் சோட்.

இஸ்லாமிய நூல் பதிப்பு பிரசுரங்கள்,

இயற்கை மதம் 0—8—0
இமாம் கழ்ஸாலி அவர்கள் ஜீவிய சரிதம் 1—4—0
உமர்பாரூக்(முதல்பாகம்) 1—8—0
திருகுர் ஆன் (தமிழ் மொழிபெயர்ப்பு) 2—0—0

கிடைக்குமிடங்கள்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு
இஸ்லாமியா நூல் பிரசுரசங்கம், பாலக்கரை, திருச்சி.

ரூ. 2—15—0 இம்மாதம் வரைதான் ரூ. 2—15—0
(போலி கெடியாரத்தை வாங்கி மோசமடையாதீர்கள்)



லீவர் பாக்கேட் வாச் (ரயில்வே மார்ச்) எங்கள் சொந்த ஆர்டரின் பேரில் லீவர் சாமான்களால் தயார் செய்து ஜனங்களுக்கு மனதைத திருப்திகரம் செய்யக்கூடியதாயும் சிரிய சாமான்களாகவும் பார்வைக்கு அழகாயும் உறுதியான சாமான்களாலும் நீடித்த காலம் உழைக்கும். 5 வருஷம் காரண்டி. மூகதுங்கள். லீவர் கை கெடியாரம் ரூ 4-15-0.

ஸ்விஸ் வாச் Co., PAREL, BOMBAY (12-E)

"மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

முதல் பதிப்பு விலை ரூ 1. இரண்டாம்பதிப்பு [50 படங்களுடன்]
விலை ரூ. 2. [தபால் சார்ஜ் வேறு]

வெளிநாட்டு ஆர்டர்களுக்கு முன்பணம் அனுப்பவேண்டும்.

மோட்டார் ஸ்கூல் [1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது]
இங்கு 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கத்துக்கொடுத்து கவர்ன்மெண்ட் லேசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
இதன்வருடசந்தா ரூ. 4—0—0
அல்லது S. 2,25
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

"குமரன்"

ஓர் சிறந்த மாதப்பதிப்பு.
சுயமரியாதைக் கொள்கைப்படி.
அற்புதமான விஷயங்கள்
கொண்டது.
வருஷசந்தா ரூ. 0—12—0
மானேஜர்
"குமரன்"
காரைக்குடி

அநேக பரிசுகளும், தங்க மெடல்களும், ஏராளமான நற்சாட்சிகளும் பேற்று உலகமெங்கும் புகழ்பேற்று விளங்குவதோடு 25—8—23-ல் சென்னையிலும், 14—4—27-ல் மதுரையிலும் நடந்த வைத்திய மகாநாடுகளில் இவர் மருந்துகள் முதல்தர தேவ ஔஷதங்களென தங்க மெடல்களும், வைத்திய ஆசிரியர் பட்டமும் பேற்றவர்.

பழநி, சி. எம். சாமி.

குருதாம்பிரா பஸ்பம்.

சாப்பிடுங்கள் சகல வியாதிகளுக்கும் கைகண்டது.

சூலை, கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம், சொரிகுஷ்டம், பொரிகுஷ்டம், விரிகுஷ்டம், கபாலகுஷ்டம், குறைநோய், சில்லட்டைக்கடி, கடிவிஷங்கள் 8-ம் நீராம்பல், பெருவயிறு மகோதரம், நீர்க்கவுசை, அண்டவாய்வு, யானைக்கால், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல்கள் திரேகம் அழுகித் துர்நாற்ற மெடுத்தல், ஆணிப் புண்கள், கிராணி, இன்னும் அநேகவிதமான கொடிய வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும்.

50-வேளை பஸ்பம் விலை ரூ. 25. ஏழைகளுக்கு பாதிவிலை. வி. பி. சார்ஜ்வேறு



தாது புஷ்டிக்கு

மன்மத குளிகையை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேக வலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.
புட்டி 1க்கு விலை ரூ.2 தபால் சார்ஜ் வேறு.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது
கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனேநிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்பம் உண்டாகும். மிக்க அநுபவமானது. புட்டி 1க்கு ரூ. 2



குறடபு:— பினாங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் அட்வான்ஸ் ரூ. 5 உடன் ஆர்டரும் வி. பி. யில்லாத தேசவாசிகள் ரூ. 2 தபால் செலவும், மருந்துக் கிரயமும் சேர்த்து முன் பணத்துடன் ஆர்டரும் அனுப்பவேண்டும்.
ஏராளமான நற்சாட்சிகளையும், மற்ற அவிழ்தங்களையும் கியாட்லாக்கில் பார்க்கலாம்.

வைத்திய ஆசிரியர் சி. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலே, பழநி S. I.

"உண்மை விளக்கம் பதிப்பகத்தில்" அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.